# மனிதனின் முடிவு
# எங்கே போகின்றது….?
# சற்று சிந்தியுங்கள்….!




# அன்றாட வாழ்க்கையில் "சந்தர்ப்பவசத்தால்…" நமக்குள் எப்படித் தீமைகள் வருகின்றது…?

குடும்பத்துடன் சந்தோசமாக வாழும் காலத்தில் நாம் ஒரு காரில் பயணம் செய்கின்றோம் என்றால் நமது காருக்குக் குறுக்கே ஒருவர் திடீரென்று வந்து விட்டால் சடாரென்று காரை நிறுத்திக் குறுக்கே வந்தவரைப் பார்த்து வெறுப்பு கொண்டு அவரைத் திட்டுகின்றோம்.

இப்படிக் காரின் குறுக்கே வந்தவரைப் பார்த்து வெறுப்பதுடன் மட்டுமல்லாமல் ஒருவேளை அவர் காரில் அடிபட்டிருந்தால் என்னாவது...? என்ற பயமும் நமக்குள் வருகின்றது.

இது சமயம் காரினுடைய டிரைவரும் சரி... மற்றும் காருக்குள் இருக்கும் மற்றவர்களும் சரி... இதனின் உணர்வுகளை நுகர நேருகின்றது.

காரின் குறுக்கே வந்தவருக்கு ஏதேனும் ஆபத்து வரக்கூடாது என்று எண்ணுகின்றனர். ஆனால் பயத்தின் உணர்வுகளை அவர்கள் நுகர்ந்ததனால் பயத்தின் உணர்வுகள் அவர்களிடத்தில் "ஓம் நமச்சிவாயா..." என்று உடலாக மாறி விடுகின்றது.

1.நமது மனித உடலில் பயத்தின் உணர்வுகளும் அதிர்ச்சியின் உணர்வுகளும் இரத்த நாளங்களில் கலக்கப்படும் பொழுது

2,அதிர்ச்சியான உணர்வுகளைத் தூண்டும் உணர்வுகள் நல்ல அணுக்களில் ஊடுருவி நமது உடலையே நடுங்கச் செய்கின்றது.

அது சமயம் நாம் எதைச் செய்வது...? என்ற சிந்தனை இல்லாதபடி "பிரமை பிடித்தது..." போன்று ஆகி விடுகின்றோம்.

ஆனால் ஒருவர் தான் அறியாது திடீரென்று ஒரு காரின் குறுக்கே வருவதன் காரணம் எதுவென்றால்... அவருடைய குடும்பத்தில் எத்தனையோ பிரச்னைகள் வியாபாரத்தில் கடன் கொடுக்கல் வாங்கல் தனக்குத் திரும்பக் கொடுக்க முடியாத நிலைமை அதனால் சஞ்சலமும் சோர்வும் ஏற்பட்டுக் கடன் கொடுத்தவருக்கு நாம் எப்படி நல்லவராக நடந்து கொள்வது...? என்ற சிந்தனையில் செல்வோரும் உண்டு.

அதே சமயத்தில் நம்முடைய வருமானம் இவ்வளவுதான்...! ஆனால் குழந்தைகளுக்குப் பள்ளிக்கு மாத கட்டணம் செலுத்த வேண்டும், அவர்களுக்கு உடை எடுக்க வேண்டும் நாளை என்ன செய்வது...? என்ற நிலையில் குடும்பத்தைக் காக்கும் உணர்வுடன் அவருடைய எண்ணங்கள் சென்று அதே சிந்தனையில் செல்லப்படும் பொழுது

1.எதிரே வரும் வாகனத்தையோ எதிரே வரும் மனிதரையோ அல்லது

2.எதிரே இருக்கும் பள்ளத்தையோ பார்க்க முடியாத சந்தர்ப்பம் ஏற்படுகின்றது.

இப்படித் திடீரென்று குறுக்கே வரும் மனிதரைக் கண்டதும் காரின் டிரைவர் ஒலியை எழுப்பிச் சடாரென்று பிரேக் பிடிக்கின்றார். இதனால் காருக்குள் இருக்கும் அனைவருக்கும் அதிர்ச்சி ஆகின்றது.

அது சமயம் காரின் குறுக்கே வந்தவரை எண்ணும் பொழுது

1,நமது உயிரான ஈசன் அந்த உணர்ச்சிகளை நமது உடல் முழுவதும் சுழலச் செய்து அதன் வழி நம்மை இயக்குகிறது.

2.இதனின் உணர்வின் தன்மை நமது நல்ல அணுக்களின் வலுவை இழக்கச் செய்கின்றது.

நன்கு வசதியுள்ள வேதனையை அறிந்திராத செல்வந்தர்கள் இத்தகைய அதிர்ச்சியான சம்பவங்களைக் காண நேரிடும் பொழுது இதனின் உணர்வுகள் அவர்களிடம் ஆழப்பதிந்து விட்டபின் என்ன ஆகிறது...?

இதனின் உணர்வுகளை மற்றவர்களுடன் உரையாடலில் பகிர்ந்து இதையே எண்ணி இதனின் உணர்வுகளை வளர்ப்பதனால்

1.அவருடைய உடலில் பலவிதமான நோய்களும் உடலில் நடுக்க வாதமும்

2.சிந்திக்கும் தன்மையை இழப்பதும் இனம் புரியாத கோபம் வருவதும்

3.இனம் புரியாத பயம் உருவாவதும் போன்ற நிலைகள் அவரிடத்தில் ஏற்படுகின்றது.

இதே போன்று வாகனத்தில் சென்று கொண்டிருக்கும் பொழுது எதிரே ஒரு வாகனம் வந்து கொண்டிருக்கும். அதே சமயத்தில் இன்னொரு பக்கம் இருந்து ஆடோ மாடோ நாயோ ஏதோ ஒன்று குறுக்கே வரும்.

இதன் மீது மோதாமலிருக்க எதிரே வரும் வாகனத்தைக் கவனிக்காது மறு பக்கம் திருப்பும் பொழுது வாகனம் இரண்டும் எதிர்பாராது மோதலாகின்றது.

ஒரு நாயோ பூனையோ காரின் குறுக்கே வந்துவிட்டால் அதைக் காப்பாற்ற எண்ணிச் சிந்தனையை அதன் மேல் செலுத்தி எதிரே வரும் வாகனத்தைக் கவனிக்காது திடீரென்று வண்டியைத் திருப்புவதால் எதிரே வந்த வாகனமும் இவருடைய வாகனமும் மோதி விபத்துக்குள்ளாகின்றது.

இத்தகைய விபத்தில் சந்தர்ப்பவசமாகச் சில காயங்களுடன் உயிர் பிழைத்துக் கொள்ளுகின்றார் என்று வைத்துக் கொள்வோம்.

செல்வந்தராக இருந்து செல்வத்தால் மகிழ்ச்சியாக இருந்தார். ஆனால் இந்த விபத்தால் பயம் கலந்த வேதனையும் அதிர்ச்சியும் அவருள் சேர்ந்து அவரிடத்தில் "மன நோயாக..." மாறிவிடுகின்றது.

இதனால் சிந்தனை செய்யும் பொழுது பலவீனமும் தம் குழந்தைகள் தம் சொல்லைக் கேட்க மறுக்கும் பொழுது அதிர்ச்சியும் பலவீனமான நிலையில் பயமும் தன்னிடத்தில் வேலை செய்பவர்கள் தவறு செய்வதால் அதிர்ச்சியும் பயமும் வருகின்றது.

இதன் தொடர் கொண்டு பலவித நோய்களும் வருகின்றது.

பண வசதி படைத்திருப்பதினால் மனோத்தத்துவ டாக்டரிடம் செல்கின்றனர். ஆனால் மன நோயினால் உணர்வின் தன்மை உடலில் நோயாகின்றது. பின்னர் இதற்கு வேண்டிய மருத்துவமும் பயிற்சியும் செய்கின்றனர்.

1.வாழ்க்கையில் எவ்வளவுதான் செல்வம் படைத்திருந்தாலும்
2.இது போன்று எதிர்பாராத சம்பவங்களால் நுகர்ந்த உணர்வுகள் உடலில் தீமைகளை விளைவிக்கும் நிலையாக விளைந்து விடுகின்றது.

இவ்வாறு சந்தர்ப்பத்தால் நமக்குள் அறியாது சேரும் தீமைகளை எப்படித் துடைப்பது...?

துருவ நட்சத்திரத்தின் அருள் உணர்வுகளை நம்முள் இணைத்திடல் வேண்டும். ஏனென்றால் மனிதனாகப் பிறந்து தமது வாழ்க்கையில் நஞ்சினை வென்று தீமை தரும் சந்தர்ப்பங்களை மாற்றியமைத்து ஒளியின் சரீரம் பெற்றவர்கள் இன்று துருவ நட்சத்திரமாக இருக்கின்றார்கள்.

துருவ நட்சத்திரத்திலிருந்து வரும் பேரருள் பேரொளியின் உணர்வுகளை நமக்குள் கவர்ந்து நம்மை நாம் சுத்தப்படுத்திக் கொள்ள வேண்டும்.

1.தங்கத்தில் திராவகத்தை ஊற்றியதும் தங்கத்தில் கலந்துள்ள செம்பும் பித்தளையும் ஆவியாகி விடுவதைப் போன்று

2.துருவ நட்சத்திரத்தின் பேரருள் உணர்வுகள் நம்முள் இணையும் பொழுது நம்முள் உள்ள தீமையின் உணர்வுகள் ஒடுக்கப்படுகின்றது.

"துருவ நட்சத்திரத்தின் பேரருளும் பேரொளியும் நாங்கள் பெற வேண்டும் எங்கள் உடல் முழுவதும் படர வேண்டும் எங்கள் உடலில் உள்ள ஜீவான்மாக்கள் ஜீவ அணுக்கள் அனைத்தும் பெற வேண்டும்" என்ற உணர்வுகளை நமது உடலுக்குள் செலுத்த வேண்டும்.

இவ்வாறு நம்மைச் சுத்தப்படுத்திக் கொண்ட பின்... யார் தவறு செய்தாரோ அவர் துருவ நட்சத்திரத்தின் பேரருள் பேரொளி பெற வேண்டும் அவர்கள் நன்மை செய்யும் பண்புகள் பெற வேண்டும் என்று இதனின் உணர்வுகளை நமக்குள் சேர்க்கும் பொழுது இவை அனைத்தும் நமக்குள் கலவையாகி நமக்குள் இரத்த நாளங்களில் கலக்கச் செய்கின்றது.

1.இதனின் உணர்வுகளை நமது உடலில் உள்ள அணுக்கள் உணவாக எடுத்து

2.மகிழ்ச்சி பெறும் உணர்வின் அணுக்களாக மாறுகின்றது.

"ஒருவர் நல்லவராக வேண்டும்" என்ற உணர்வை நாம் எண்ணும் பொழுது இதனின் உணர்வுகள் நாம் எண்ணியவரின் உடலில் படர்கின்றது.

அதே சமயம் நாம் நுகர்ந்த உயர்ந்த உணர்வின் உணர்ச்சிகள் நமது உடலில் சேரப்படும் பொழுது நமது உடலிலுள்ள நல்ல அணுக்கள் அதனை அதிகமாகத் தன்னுள் பெறுகின்றன.

இது போன்று நாம் துருவ நட்சத்திரத்தின் பேரருள் பேரொளி உணர்வுகளை நமக்குள் வலு சேர்க்கச் சேர்க்க நமக்குள் மனத் தூய்மையும் சிந்தித்துச் செயல்படும் தன்மையும் பிறவியில்லா நிலை பெறச் செய்யும் அருளுணர்வுகளும் நம்முள் உருவாகின்றது.

இவ்வுண்மைகள் அனைத்தும் அருள் ஞானிகள் நமக்கு உணர்த்தியவைகள்.

இவைகளைத் தம்முள் அறிந்துணர்ந்து நமது வாழ்க்கையில் வரும் தீமைகளை நீக்கும் நிலையாகவும் பிறவியில்லாப் பெரு நிலை பெறும் நிலையாகவும் தாம் அருள் ஞான நெறி துணை கொண்டு தம்முள் பேரருள் உணர்வுகளைச் சேர்த்து வரும் அன்பர்கள் அனைவரும்

1.தம்முள் அறியாது சேர்ந்த தீயவினைகள் சாபவினைகள் பாவவினைகள் பூர்வ ஜென்ம வினைகளை அகற்றி

2.மெய்பொருள் காணும் திறன் பெற்று

3.இவ்வாழ்க்கையில் பிறவியில்லா நிலை பெறும் சக்தி பெற்று

4.பெருவீடு பெருநிலை அடையும் நிலையாகப் பேரின்பப் பெருவாழ்வாக வாழ்ந்து வளர்ந்திட எமது அருளாசிகள்.




# கடவுளின் பெயரைச் சொல்லி ஏமாற்றுபவர்கள்

யாம் குருநாதர் உரைத்த வண்ணம் ஒரு கிராமத்துப் பக்கம் வந்து கொண்டிருந்தோம். அந்த சமயத்தில் ஒரு நான்கு முனை சந்திப்புள்ள இடத்தில் உள்ள கடையில் என்னை அமரும்படிச் செய்தார் குருநாதர்.

அப்பொழுது அந்த இடத்திற்கு ஒரு கார் வந்து நின்றது. அந்தக் காரில் ஆறேழு பேர் சாமியார் வேடம் பூண்டு மிகவும் அற்புதமாக இருந்தனர்.

அவர்கள் காரை நிறுத்திவிட்டு யாம் இருந்த கடைக்கு வந்து கடையில் இருப்பவரிடம் "டீ கொடுங்கள்..." என்றனர்.

ஆனால் டீ போடும் ஆளுக்குக் காது கேட்கவில்லை. அவர்கள், "அட.. தம்பி.... இங்கு... வா..." என்றனர். இப்படி இரண்டு முறை கூப்பிட்டும் கேட்காததால் ஜாடையில் காண்பித்து வரச் சொல்லி "உனக்குக் காது கேட்கவில்லையா...?" என்று கேட்டனர்.

டீ கடைக்காரர் "எனக்குச் சுத்தமாகக் கேட்காது..." என்றார்.

அதற்குப்பின் சாமியார் வேடம் பூண்டவர்கள் "முருகா...! ஏன் உன் பிள்ளையை இப்படிப் பார்த்துக் கொண்டிருக்கிறாய்...? உன் பிள்ளைக்குக் காது கேட்கவை முருகா..." என்றனர்.

உடனே அவருக்குக் காது கேட்க ஆரம்பித்துவிட்டது. அதன்பின் "எனக்கு முதுகுவலி தலைவலி இடுப்புவலி..." என்று ஒவ்வொருவரும் ஒன்றைச் சொல்லிக் கேட்டுக் குணமாகத் தொடங்கியதும் எங்கிருந்து அவ்வளவு கூட்டம் வந்ததென்று தெரியவில்லை...! அப்படி ஒரு பெருங்கூட்டம் கூடிவிட்டது.

அந்தக் கூட்டத்தில் முடக்குவாதம் வந்த ஒருவரைக் கொண்டு வந்து "ஐயா...! நீங்கள் எத்தனையோ பேருக்கு நல்லது செய்கிறீர்கள். ஐந்தாறு வருடங்களாகக் கட்டிலிலேயே படுத்திருக்கிறார். மல ஜலம் எல்லாம் கட்டிலில் துவாரம் போட்டு எடுக்கின்றோம். இப்படியேதான் படுத்திருக்கின்றார்... அவரைக் குணப்படுத்துங்கள்...!" என்று கேட்டனர்.

சாமியார்களாக வந்தவர்கள் விபரங்களைக் கேட்டுவிட்டு "முருகா...! உனக்கு இந்தப் பிள்ளை மேல் கருணை இல்லையா...? இவ்வளவு காலம் வேடிக்கை பார்க்கின்றாயே... முருகா...! அவர் உன்னை நினைக்கவில்லையா...? அய்யா...! நீங்கள் முருகனை நினையுங்கள்..." என்கின்றனர்.

முடமானவரும் முருகனை வேண்டுகின்றார். மீண்டும் அவர்கள் “முருகா… உன் பிள்ளையை எழுப்பிவிடப்பா… கொஞ்சம் இவர் மேல் கருணை வை…!” என்று சொல்கின்றனர்.

இப்படிச் சொன்னவுடனே முடமானவரும் சடாரென எழுந்திருக்கின்றார்.

“முருகா…! இவரை இந்த கல்லைத் தூக்கச் செய்யேன்…” என்றனர்.

அவரும் உடனே எழுந்து போய் நான்கு பேர் தூக்க முடியாத கல்லைத் தூக்கினார். அங்கே இருந்த அனைவருக்கும் ரொம்ப ஆச்சரியமாகப் போய்விட்டது. முருகனே… அங்கு வந்ததாக அந்தக் கூட்டம் நம்பியது.

கடைசியில் சாமியார் வேடம் தரித்தவர்கள் “நாங்கள் முருகன் கோயில் கட்ட வேண்டும் என்று எங்களுக்கு முருகன் உத்தரவிட்டு இருக்கின்றார்…” நீங்களெல்லாம் முருகன் கோயில் கட்டுவதற்கு உதவி செய்ய வேண்டும். எல்லா மக்களையும் முருகன் பெருமையை உணரும்படி செய்ய வேண்டும். ஆகவே உங்களால் இயன்ற பணம் கொடுங்கள் என்று சொன்னார்கள்.

உடனே, அங்கிருக்கும் கூட்டத்தினர் தாங்கள் போட்டிருக்கும் நகை மற்றும் பணம் ஏராளமாகக் கொடுத்தனர்.

சாமியார் வேடம் பூண்டவர்களும் அனைத்தையும் சுருட்டி கட்டிக் கொண்டனர். “முருகன் கோயில் கட்டி முடிந்ததும் உங்கள் அனைவருக்கும் அழைப்பு வைக்கின்றோம்… அனைவரும் வாருங்கள்…!”

அங்கு வரும் பொழுது உங்களுக்கு என்ன நோய் இருந்தாலும் முருகனிடம் சொல்லித் தீர்த்து வைக்கின்றோம் என்று சொல்லிவிட்டுக் காரில் ஏறிப் போய்விட்டனர்.

1.இதையெல்லாம் குருநாதர் பார்க்குமாறு சொல்லியதால் பார்த்துக் கொண்டிருந்தோம்.

2.உலகில் எத்தனை விதமாக ஏமாற்றிக் கொண்டிருக்கிறார்கள்…? என்பதைக் கண்டுணரும்படி செய்தார் குருநாதர்.

நகைகளையும் பணத்தையும், அள்ளிக் கொண்டு சாமியார் வேடம் பூண்டவர்கள் காரில் ஏறிப்போன பின் 2 அல்லது 3 மணி நேரம் இருக்கும். முடமாகியிருந்தவர் குணமானதாக நம்பிய நிலையில் கட்டிலில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தார்.

“எனக்கு முருகனே நேரில் வந்தார் காட்சி கொடுத்தார் குணமாக்கினார்...” என்று பேசிக் கொண்டிருந்தவர் திடீரென்று “ஐயோ... அம்மா...!” என்று கத்திக் கட்டிலிலே சுருண்டு படுத்துக் கொண்டார்.

காது கேட்காமலிருந்த டீ கடைக்காரருக்கு மறுபடியும் காது கேட்கவில்லை.

இது எப்படியென்றால் இவையனைத்தும் ஆவி வேலைகள். இத்தகைய ஆவிகளை ஏவினால் குறிப்பிட்ட நேரம் வரை செயல்படுத்தும்.

1.உலகில் உள்ள மக்களை எத்தனையோ வகைகளில்
2.கடவுள் பேரைச் சொல்லி ஏமாற்றிக் கொண்டு இருக்கிறார்கள் என்ற உண்மையை நாம் அறிந்து கொள்ள வேண்டும்.




# இன்றைய மனிதனின் தவறான உணர்வுகளிலிருந்து நம்மைக் காத்துக் கொள்ள வேண்டும்

குருநாதர் காண்பித்த அருள் வழியில் அருள் ஞானத்தை உங்களுக்குள் பதிவு செய்கின்றோம். அருள் ஞான உணர்வை உங்களுக்குள் இணைத்துப் பெருக்கும் பொழுது உங்களுள் தீமைகளை அகற்றும் சக்தி விளைகின்றது.

குமாரபாளையத்தில் நாராயணசாமி என்பவர் மேனேஜராக வேலை பார்த்துக் கொண்டிருந்தார். அவருடைய மகன் ஆஞ்சனேயர் மடத்தில் டிரைவராக வேலை பார்த்து வந்தார். அவர்களையும் அவர்களது குடும்பத்தினரையும் மாதேஸ்வரன் மலைக்கு யாம் அழைத்துச் சென்றோம்.

நாராயணசாமி மற்றும் அவர்களுடைய பாட்டி குழந்தைகள் அனைவரையும் அழைத்துச் சென்றோம். போகும் வழியானது யானைக் காடு. குறுக்குப் பாதை என்று யானைக் காட்டின் வழியாக அவர்களை அழைத்துச் சென்றோம்.

மலைப்பாதையில் சென்று கொண்டிருக்கும் பொழுது எங்களுக்கு எதிர்த்தால் போன்று ஒரு புதரில் இரண்டு புலிகள் நின்று கொண்டிருந்தன. யாம் அழைத்து வந்தவர்கள் புலிகளைப் பார்க்கவில்லை.

அவர்கள் பார்த்தால் பயந்துவிடுவார்கள் என்று கருதி யாம் அவர்களுக்கு முன்னால் போய் நின்று கொண்டோம். யாம் அழைத்து வந்தவர்களில் 10 வயது 12 வயது சிறுவர்களும் இருந்தனர். பின்னால் வயதானவர்கள் வந்து கொண்டிருந்தனர்.

1.யாம் அவர்கள் புலியைப் பார்க்காதவாறு மறைந்து நின்று கொண்டு பிரார்த்தனை செய்தோம்.

2.எல்லோரையும் பார்த்துக் குறி வைத்துக் கொண்டிருந்த புலிகள் அவைகளுக்கு எதிரான உணர்வுகளைக் கண்டவுடன்

3.இரண்டு புலிகளும் தாண்டிக் குதித்து ஓடின. எதையோ கண்டு பயந்ததைப் போன்று விருட்டென்று ஓடி மறைந்தன.

புலிகள் ஓடுவதைக் கண்டு யாம் அழைத்து வந்தவர்கள் வெகுவாகப் பயந்து போனார்கள். அதன் பிறகு, அங்கிருந்து அவர்களை அழைத்துச் சென்றோம். அப்பொழுதெல்லாம் அவர்களுக்குக் காட்சிகள் கிடைக்கும்படிச் செய்தோம்.

மாதேஸ்வரன் மலைக்கு அவர்களைப் பழக்கத்திற்காகக் கூட்டிச் சென்றோம். இயற்கை எப்படிச் செயல்படுகிறது...? என்ற நிலைகளை யாம் அறிவதற்காக வேண்டி குருநாதர் எம்மை எல்லா இடங்களுக்கும் செல்லச் செய்து பலரைச் சந்திக்கும்படிச் செய்தார்.

காட்டிற்குள்ளும் மனித வாழ்க்கையிலும் என்ன இருக்கின்றது...? என்பதைத் தெரிந்துதான் சொல்கின்றோம். ஆனால் உங்களுக்கு இதைச் சொல்கின்றோம் என்றால் சாமி "கதை சொல்வதாக..." எண்ணக் கூடாது.

இயற்கை எப்படி இயங்குகின்றது...? வாழ்க்கையில் வரக்கூடியது அனைத்தும் என்ன செய்கின்றது...? என்பதை குருநாதர் எம்மை அனுபவரீதியாக உணரும்படி செய்தார்.

1.காட்டிற்குள் சென்றால் மிருகங்கள் கட்டுப்படும்.

2.ஆனால் மனிதர்களிடம் பழகும் பொழுது அவர்களிடம் இருந்து தப்பிப்பதே கடினம் தான்.

அதனால் நாம் இன்று பெரும் காட்டினுள் வாழ்கின்றோம். இங்கே நமது உணர்வுகள் கொண்டுதான் நாம் எதையும் மாற்றி அமைக்க வேண்டும்.

ஆகையால் "ஒருவர் தவறு செய்கிறார்...!" என்று எண்ணும் பொழுது நமக்குள் தவறின் உணர்வுகளே விளைகின்றது. ஆகவே

1.ஒருவரிடம் தவறு என்று உணர்ந்த அடுத்த நிமிடமே அவருடைய தவறான உணர்வு நம்மிடம் இல்லாதபடி

2.துருவ நட்சத்திரத்தின் உணர்வை எடுத்து நமக்குள் சுத்தப்படுத்திக் கொள்ள வேண்டும்.

3.இதனால் அவருடைய உணர்வு நம்மைத் தாக்குவதில்லை.

இப்படித் துருவ நட்சத்திரத்தின் உணர்வை தம்முள் பெருக்கித் தீமைகள் வராது காக்கும் நிலையாக... உணர்வை ஒளியாக மாற்றும் நிலையாக... ஞானிகள் காண்பித்த அருள் வழியில் வாழ்ந்து வரும் அன்பர்கள் அனைவரும்... தம்முள் அறியாது சேர்ந்த சாப வினைகளை பாவ வினைகளை தீய வினைகளை நீக்கி... அருள் ஞானிகளின் அருள் சக்தி பெற்று...

1.உங்களுடைய பார்வையில் மற்றவர்களுடைய தீமைகளை நீக்கிடும் நோய் நீக்கிடும் அருள் சக்தி பெற்று

2.நீங்கள் இவ்வாழ்க்கையில் பெருவீடு பெரு நிலை பெறும் நிலையாக பிறவியில்லா நிலையினைப் பெறும் நிலையாக

3.பேரின்பப் பெருவாழ்வாக வாழ்ந்து வளர்ந்திட எமது அருள் ஆசிகள்.




## “நீ எதை எண்ணுகின்றாயோ நீ அதுவாகின்றாய்…!” என்று கீதை சொல்வதன் உட்கருத்து

உதாரணமாக ஒருவன் நம்மைக் கெடுத்து விடுவேன் என்று சொன்னால் அவன் சொல்லை நாம் அதைப் பதிவு செய்து கொள்கிறோம்.

பதிவு செய்து கொண்ட பின்… “என்னை இப்படிப் பேசினானே… பேசினானே…” என்று அவனின் நிலையைக் கூர்மையாக எண்ணி அவனின் நிலையை நம் உடலுக்குள் சேர்த்து விடுகின்றோம்.

“நாம் எவ்வளவு கஷ்டப்பட வேண்டும்…” என்று அவன் எண்ணினானோ அந்த உணர்வின் தன்மையை நமக்குள் எடுத்து அதே வினையாகச் சேர்த்த பின்… நமக்குள் துன்புறும் உணர்வுகள் விளைகின்றன.

அவன் எண்ணியபடி நம் மனம் மாறுகின்றது. அதன் வழி நமக்குள் வரும் பொழுது

1.“இவன் என்னை இவ்வாறு சொன்னான்… சொன்னான்…” என்று அவன் உணர்வை நமக்குள் வளர்த்துக் கொண்டு

2.அவன் உடலில் விளைந்த உணர்வுகள் நம் உடலுக்குள் விளைந்தபின்

3.“கெட்டுப் போக வேண்டும்…” என்று அவன் சொன்ன உணர்வுகள் நமக்குள் உள்ள நல்ல உணர்வுகளைக் கெடச் செய்து

4.”அவன் நிலைக்கு நாம் ஆளாகின்றோம்…”

நாம் இந்த உடல் நலிந்த பின் இறக்கப்படும் போது அவனுடைய நினைவுகள் வந்து… கண்ணன் காட்டிய வழி கொண்டு அவன் செய்த தீயதை நாம் மீண்டும் எண்ணும்போது “நீ எதை எண்ணுகின்றாயோ அதுவாகின்றாய்…”

அவன் தீயதை விளைவித்ததின் தன்மையை நீங்காது அவனின் நினைவு கொண்டு நாம் வருவோமென்றால் அந்த உணர்வின் தன்மை இந்த உடலுக்குள் வந்து

1.அவன் சொன்ன சிரமங்கள் நமக்குள் விளைந்து

2.இந்த உடல் நலிந்து அவன் நினைவு கூடுகிறது.

அவன் நினைவு கூடிய பின்பு இந்த உடலை விட்டு உயிரான்மா பிரிந்தால் அவன் யாரைச் சொன்னானோ அங்கே பழி தீர்க்கும் உணர்வுடன் சென்று… இதே உணர்வு அங்கே விளைந்து… அவனையும் வீழ்த்தி விடும்.

ஆகவே கீதையில் “நீ எதை எண்ணுகின்றாயோ அதுவாகின்றாய்” என்று சொல்வது. இதுவும் கூர்மை அவதாரம்தான்.

அவன் செய்த தீய உணர்வின் நிலையை நாம் கூர்மையாக எண்ணி அந்த உணர்வின் சக்தியை நமக்குள் வளர்த்துக் கொண்டால் அவனின் உணர்வு நமக்குள் வலுப்பெற்று... அதனின் உணர்வு நமக்குள் ஓங்கி வளர்ந்து...

1.இந்த உடலைவிட்டுப் பிரிந்து செல்லும் உயிரான்மா அவனின் மணம் கொண்ட ஈர்ப்பு வட்டத்துக்குள் சிக்கி

2.அவனின் பழி தீர்க்கும் உணர்வை அவனுடைய உடலில் விளைவித்து அவனையும் வீழ்த்தும்.

இதைத்தான் "ஓ...ம் நமச்சிவாய... சிவாய நம ஓ...ம்" என்று சொல்கின்றோம்.

திரும்பத் திரும்ப எண்ணிய உணர்வின் தன்மை சிவமானாலும் சிவத்திற்குள் சக்தியாக இயங்கி எதனின் மணமோ அதனின் நிலைகள் கொண்டு மீண்டும் இயங்கி "மீண்டும் மீண்டும் தனக்குள் எதனைச் சேர்க்கின்றோமோ..." அதனின் நிலைகள் கொண்டு மாறிக் கொண்டேயிருக்கும்.

அதைத்தான் கீதையில் "எதை நீ நினைக்கின்றாயோ அதுவாகின்றாய்...!" என்று எடுத்துரைக்கப்பட்டது.

மற்ற உயிரினங்கள் தன்னைக் காத்திடத் தன்னைக் காட்டிலும் உயர்ந்த நிலைகள் கொண்டு அதனின் உணர்வை நுகர்ந்து பரிணாம வளர்ச்சியை அடைந்து எதனையும் காத்திடும் உடலாகப் பெற்றது.

அவ்வாறு பரிணாம வளர்ச்சி அடையச் செய்து மனிதனான நிலையில் தன் உயிரின் துணை கொண்டு தீமையை வென்று உணர்வினை ஒளியாக மாற்றி ஒளிச் சரீரமாக நின்று என்றும் பதினாறு என்ற நிலையில் வாழ்ந்து கொண்டிருப்பவர்கள் மெய் ஞானிகள்.

இந்த மனித வாழ்க்கையில் ஏற்படும் இடையூறுகளைத் தகர்த்திட.... அது நமக்குள் நிலைத்திடாது தடுத்திட.... கீதையிலே கண்ணன் காட்டிய அருள் நெறி கொண்டு அந்த மகரிஷிகளின் அருள் சக்தியை நாங்கள் பெற வேண்டும் என்று நம்முள் உட்செலுத்தி இந்தத் தீமைகளைத் துடைக்க எண்ணினால் தீமைகள் நமக்குள் வராது.

1.நாம் எண்ணிய அந்தக் கூர்மையின் நிலைகள்

2.இந்த வாழ்க்கையிலே தீமையை அகற்றும் சக்தியாக நமக்குள் ஓங்கி வளர்ந்து

3.அந்த அருள் ஞானியின் சக்தி நமக்குள் வந்து நமக்குள் வலுப்பெறுகின்றது.

அவ்வாறு அந்த ஞானிகளின் உணர்வுகள் வலுப் பெற்றுப் பிறருடைய உணர்வுகள் தம்மை இயக்காமல் தடைப்படுத்தும் அனைவருக்கும் எமது அருளாசிகள்.




# எதிர் நிலையான உணர்வுகள் நம்மை எப்படி இயக்குகின்றது…?

நம் குடும்பத்தில் எதிர்பாராத நிலைகள் வரும் பொழுது ஒருவர் வெறுப்படைந்து வேதனைப்படும் செயலைச் செய்வார். அவரை நாம் உற்றுப் பார்த்தபின் உணர்வை நுகர்ந்து அறிவோம்.

“இப்படிச் செய்கின்றானே…!” என்ற நிலை வந்துவிடும். அது வந்தபின் சுத்தப்படுத்தாமல் விட்டுவிடக் கூடாது.

அந்த மாதிரிச் செய்கின்றானென்றால்

1.உடனே நம் குரு காட்டிய முறைப்படி “ஈஸ்வரா…” என்று உயிரை எண்ணி

2.துருவ நட்சத்திரத்தின் பேரருளும் பேரொளியும் நாங்கள் பெற வேண்டும் என்று சுத்தப்படுத்திக் கொள்ள வேண்டும்.

சுத்தப்படுத்தவில்லை என்றால்… அவர் செய்யும் தவறான உணர்வு நம் உயிரில் பட்டு உடல் முழுவதும் பரவுகின்றது. நம் ரத்தங்களில் முழுவதும் கவரப்படுகின்றது.

இரத்தங்களில் கலந்த பின் நம் உடலில் உள்ள நல்ல அணுக்களை… “நல்ல உணர்வை ஈர்க்க விடாதபடி” தடைப்படுத்தி விடுகின்றது.

இரத்தத்திலுள்ள உணர்வுகளை நல்ல அணுக்கள் ஏற்றுக் கொள்ள மறுக்கின்றது.

1.அப்படி ஏற்றுக் கொள்ள மறுக்கும் பொழுது கொதிப்பென்ற நிலைகள் வருகின்றது.

2.வெறுப்பென்ற நிலைகள் வரும் பொழுது நமக்கு ஒரு விதமான நடுக்கம் வரும்.

3.ஏனென்றால் அந்த அணுக்களுக்குச் சரியான ஆகாரம் இல்லையென்றால் அது பதறும்… நமக்குப் பதட்டம் வரும்.

அப்படி நடுக்கம் வரும் பொழுது சிறிதேனும் அந்த அணுக்களில் சேர்ந்து விட்டால் அந்த உணர்வுகள் இணைந்து கொள்ளும். அடுத்து தவறு செய்யும் உணர்வுகளை நுகர்ந்து அது வளர்ந்துவிடும்.

1.நல்ல அணுக்களின் மலங்களால் உருவானதுதான் நம் உறுப்புகள்… அப்பொழுது உறுப்பின் வளர்ச்சி குறைகின்றது.

2.அதுவும் சேர்ந்து அந்த அணுக்களின் தன்மையும் சேர்ந்து ஒன்றுக்கொன்று போர் முறை செய்து “வலி…” எடுக்கின்றது.

நாம் தப்பு செய்யவில்லை. ஒருவருக்கொருவர் சண்டையிடும் உணர்வை நுகர்ந்தோமென்றால் இந்த நிலையாகின்றது.

அதே சமயத்தில் இந்த வெறுப்பின் உணர்வு கொண்டு வீட்டுக்கு வருகிறோம் என்று வைத்துக் கொள்வோம். அந்த வெறுப்பின் உணர்வுகள் நமது ஆன்மாவில் அதிகமாகப் பெருகியிருக்கும்.

வீட்டில் சின்னக் குழந்தை ஒரு பாத்திரத்தைப் போட்டால் போதும்…! அல்லது குழந்தை ஏதாவது சத்தம் போட்டுப் பேசினால் போதும்.

இது எதிர் நிலை ஆகும்.

மனைவியைப் பார்த்து…

1.பிள்ளையை வளர்த்திருப்பதைப் பார்…! என்று வெறுப்பான நிலைகளில் பேசச் சொல்லும்.

2.சில நேரங்களில் வீட்டில் ஏதாவது நடந்தால் உங்களை அறியாமலே கோபித்துக் கொள்வீர்கள்.

இதிலிருந்து நாம் என்ன தெரிந்து கொள்கின்றோம்…?

நாம் நுகர்ந்த உணர்வுதான் நம்மை இயக்குகின்றது. அப்படி இயக்கும் அந்த உணர்வை யாம் கொடுத்த அருள் சக்தி கொண்டு ஆயுள் மெம்பர் அனைவரும் அந்த நிமிடமே புருவ மத்தியில் ஈஸ்வரா…! என்று எண்ணி துருவ நட்சத்திரத்தின் பேரருளைப் பேரொளியை நாம் பெற வேண்டும் என்று நம் இரத்தத்தில் கலக்கச் செய்ய வேண்டும்.

இரத்தத்தில் கலந்தபின் அவர்கள் இருவருமே பொருளறிந்து செயல்படும் சக்தி பெற வேண்டும் தெளிந்த மனம் பெற வேண்டும் ஒன்றுபட்டு வாழும் சக்தி பெற வேண்டும் என்று எண்ண வேண்டும்.

1.அந்த உணர்வின் உணர்ச்சிகளை நம் இரத்தத்தில் சேர்க்கும் பொழுது அவன் சண்டை போட்ட உணர்வைத் தணிக்கின்றது.

2.அவன் ஒன்று சேர்ந்து வாழ வேண்டும் என்ற உணர்வு கலக்கின்றது.

3.உணர்வின் தன்மையை உயிர் உருவாக்குகின்றது… கருவாகின்றது… நம் இரத்தத்தில் சுழல ஆரம்பிக்கின்றது.

4.இது நம் அணுக்களுடன் சேரும் பொழுது நமக்கு ஒத்த நிலையாக மாறுகின்றது.

இந்த மாதிரி எல்லாவற்றையும் மாற்றிப் பழக வேண்டும்.

சாமி கும்பிட்டேன்... தியானமிருந்தேன்... இப்படி ஆகிவிட்டது...! என்று சொல்லக் கூடாது. பிறருடைய கஷ்டங்களைக் கேட்டுவிட்டுச் சுத்தப்படுத்தாமல் இருந்தால் என்ன செய்வது...?

சட்டையில் அழுக்குப்பட்டால் துவைத்துக் கொள்கின்றோம். ஒரு நாற்றமான பொருள் சட்டையில் பட்டால் உடனடியாக துவைத்துக் கொள்கின்றோம். அது போன்று வெறுப்பென்ற நிலைகளை உடனே சுத்தப்படுத்தியாக வேண்டும்.

எந்த நிலையிலும் எந்தச் சூழ்நிலையிலும் பிறருடைய தவறை நாம் பார்த்து விட்டால் அந்த உணர்வுகள் நம்மிடம் வந்த பின் தான்... "தவறு செய்கின்றான்..." என்று அறிகின்றோம்.

அந்த உணர்வின் தன்மை நம் உடலுக்குள் உணர்ச்சிகளைத் தூண்டி

1.நம்மை அறியாமலேயே "இப்படிச் செய்கின்றான்..." என்று சொல்ல வைக்கின்றது.

2.நாம் நுகர்ந்த உணர்வுகள் இப்படிப் பேச வைக்கின்றது... இதை நாம் தடைப்படுத்த வேண்டும்.

அந்த நேரத்தில் "ஈஸ்வரா" என்று நம் உயிரை எண்ணி நம் உடலுக்குள் போகாமல் தடைப்படுத்த வேண்டும். அந்தத் துருவ நட்சத்திரத்தின் பேரருளும் பேரொளியும் பெற வேண்டும், என்று எண்ணிக் கண்ணின் நினைவை உள்ளுக்குள் செலுத்த வேண்டும்.


பின் அவன் பொருளறிந்து செயல்படும் திறன் பெற வேண்டும். நல்ல ஒழுக்கமுள்ளவனாக வரவேண்டும். பண்புடன் நடந்து கொள்ளும், சக்தி பெற வேண்டும் எ\ன்று எண்ண வேண்டும்.

இந்த உணர்வு நம் உடலுக்குள் இரத்தத்திலுள்ள அவன் உணர்வைத் தணிக்கின்றது.

1.ஆக தியானமென்றால் நாம் கடும் தவமிருந்து எல்லாச் சக்தியும் பெறுவதல்ல.

2.ஒவ்வொரு நிமிடமும் நாம் அந்த அருள் சக்தி பெற வேண்டும். நல்ல குணங்கள் வரவேண்டும் என்று தியானித்து

3.வரும் உணர்வுகளை எல்லாம் ஒளியாக மாற்றிக் கொண்டே இருக்க வேண்டும்.




## “தீமையை அகற்றிடும் சாரம்” - வியாசகர் கொடுத்தது

ஒருவர் வேதனைப்படும் போது அந்த வேதனையான உணர்வுகள் உள் சென்றபின் நம் நல்ல குணங்களை அது கொன்று கொண்டிருக்கும். இதற்கு இரண்யன் என்று ஞானிகள் பெயர் வைத்தார்கள்.

நல்ல குணத்துடன் இருக்கும் போது ஒருவர் வேதனைப்படுவதைக் கண் கொண்டு பார்த்தவுடனே

1.நம் கண்ணின் கருவிழி அவரைப் படம் எடுக்கின்றது.

2.அவர் உடலிலிருந்து வரும் வேதனையான உணர்வை நம் கண்ணின் காந்தப் புலனறிவு கவர்ந்து

3.நம் புலனறிவுக்கு உணர்த்திய அந்த உணர்வின் இயக்கம் கொண்டு

4.அவர் உடலிலிருந்து வரக்கூடிய வேதனை உணர்வின் சத்தை நம் ஆன்மாவாக மாற்றுகின்றது.

ஒரு மரம் தனக்குள் சேர்த்துக் கொண்ட உணர்வின் சத்தின் துணை கொண்டு... காற்றிலிருந்து எவ்வாறு தன் இனச் சத்தை எடுத்துத் தன்னை வளர்த்துக் கொள்கின்றதோ இதைப் போன்றுதான்

1.ஒருவரை நாம் கூர்ந்து கவனிக்கும் பொழுது அவர் படும் வேதனையை ஊழ்வினையாகப் பதிவு செய்து

2.அதனின் துணை கொண்டு அவர் உடலிலிருந்து வெளிப்படும் அந்த உணர்வலையைக் கவர்ந்து

3.நமது ஆன்மாவாக மாற்றிச் சுவாசித்து நம்முள் உட்புகுத்திக் கொள்கின்றோம்.

இவ்வாறு நாம் சுவாசித்து உயிருக்குள் போனவுடனே நம் உயிருக்குள் இது இயங்கியபின் உடலுக்குள் சென்று அவர் படும் வேதனையை நமக்கும் உணர்த்துகின்றது.

இருப்பினும் நம் நல்ல குணங்களை அது மறைத்து விடுகின்றது.

நம் ஆன்மாவாக இருக்கும் பொழுது அவர் வேதனைப்பட்ட நிலையும் இது போன்ற பல நிலைகள் கண்ணால் பார்த்த உணர்வுகள் நம் மடி மீது இங்கே சுருண்டு கொண்டுள்ளது.

இவ்வாறு சுருண்டு கொண்டு நல்ல சிந்தனை இல்லாது நம்மை இயக்கிக் கொண்டிருக்கும் உணர்வின் தன்மைகளை உயிர் என்ன செய்கிறது...?

நாம் எண்ணுகின்றவற்றை எல்லாம் அவை உடலுக்குள் செல்லும் பொழுது அணுவின் தன்மையாக இரத்தங்களில் உருப்பெறச் செய்து இந்திரலோகமாகச் சிருஷ்டிக்கின்றது.

சிருஷ்டிக்கும் நிலையாக இருக்கும் பொழுது

1.அந்தச் சிருஷ்டியைத் தடுத்திடும் நிலையாக இந்த வேதனையான உணர்வுகள் உள் சென்று

2.அது செயல்படாது எவ்வாறு இருக்கிறது..? என்ற நிலையின் விளக்க உரைதான் கீதா உபதேசம் என்றாலும் இதனுடைய சாரம் இதுதான்.

கண்ணால் காட்டிய உணர்வுகளினால் உடலுக்குள் அது உணர்வின் செயலாக அதனின் சாரமாக இயங்குகிறதென்ற நிலையை எமக்கு நமது குருநாதர் தெளிவுற எடுத்துக் காட்டினார்.

கீதையில் உணர்வின் இயக்கங்களை வியாசர் காட்டியுள்ளார். உணர்வின் இயக்கம் எவ்வாறு இயங்குகிறதென்ற நிலையை அந்த ஞானிகள் வகுத்துக் கொடுத்திருந்தாலும் நாம் நுகர முடியாது அது காலத்தால் மறைந்து விட்டது.

1.அப்படி மறைந்த நிலைகளை நமது குருநாதர் எமக்குத் தெளிவுற எடுத்துரைத்து அதனின் உணர்வின் சாரத்தை வெளிப்படுத்தினார்

2.அதை நீங்களும் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்கே இதை வெளிப்படுத்துகின்றேன்.

ஏனென்றால் நீங்கள் நல்லது செய்யும் இந்த நிலைகள் ஒருவரைக் காத்திட நீங்கள் எண்ணினாலும் அவர் பட்ட வேதனையின் நிலைகள் உங்களுக்குள் நல்ல குணத்தை மறைத்து நீங்களும் வேதனைப்பட நேருகின்றது.

அதனின்று விடுபட... அந்த அருள் ஞானி வியாசர் காட்டிய அருள் நெறி கொண்டு அந்த உணர்வின் சக்தியை நினைவு கூர்ந்து உங்களுக்குள் கவரச் செய்கின்றோம்.

1.அருள் ஞானியின் உணர்வைச் சக்தி வாய்ந்த வித்தாக உங்களுக்குள் ஊன்றி ஊழ்வினையாக மாற்றி

2.அதனின் நினைவு கொண்டு நீங்கள் எண்ணும்போது அந்த மகரிஷிகளின் அருள் சக்தியை நீங்கள் நுகர்ந்து

3.உங்களையறியாது உட்புகுந்த தீமைகள் விளையாதபடி... உங்களை மீட்டுக் கொள்ளும் நிலைக்குத்தான் இதை உபதேசிப்பது.

ஏனென்றால் இவ்வாறுதான் நமது குருநாதர் எமக்கு உபதேசித்தருளினார். எம்மையறியாது எமக்குள் உட்புகுந்த அந்தத் தீமைகளை நமது குருநாதர் காட்டிய அருள் வழியில் நீக்கினேன்.

எம்மைப் போன்று நீங்களும் உங்கள் வாழ்க்கையில் வரும் தீமைகளை நீக்கிடும் ஆற்றல் பெற வேண்டும் என்பதற்குத்தான் இதை எடுத்துரைக்கின்றோம்.

உணர்வின் தன்மையின் இயக்கத்தை "கீதை" என்று வியாசர் சொன்னாலும் அந்த உணர்வின் சாரத்தைக் குரு காட்டிய நிலைகள் கொண்டு நீங்கள் உணர்ந்தறிய முடியும்.

நீங்கள் செய்த நன்மைக்குள் உங்களை அறியாது தீமைகள் எவ்வாறு உட்புகுந்ததோ

1.அந்தத் தீமைகளை அகற்றிடும் "சாரத்தை..."

2.அருள் ஞானி வியாசகர் காட்டிய அருள் நெறி கொண்டு நீங்கள் கவர்ந்து

3.தீமையை அகற்றிடும் திறனாக உங்களுக்குள் அது விளைய வேண்டும் என்பதற்கே யாம் இதை உபதேசிப்பது.




# யானை வரும் பின்னே... மணியோசை வரும் முன்னே...!

பூமியில் உள்ள காற்றுக்குள் பல வித செடிகள் மரங்கள் வெளியிட்ட உணர்வின் அலைகள் பரவியிருக்கின்றன. அவ்வாறு பல விதமான உணர்வின் அலைகள் பரவி இருந்தாலும் ஒரு வித்து தன் இனத்தின் சத்தை அதிலிருந்து பிரித்து எடுத்துச் செடியாக மரமாக வளருகின்றது.

இதைப் போன்றுதான்

1.நமது உடல் பூமிக்குச் சமமானது.

2.உயிரின் இயக்கத்தால் நாம் கவரும் நிலைகள் மற்றும் பகிர்ந்து கொண்ட உணர்வின் தன்மைகளைப் பதிவு செய்து கொண்டபின்

3.பதிந்த நிலைகளை தன் இனமான உணர்வின் அலைகளைக் காற்றிலிருந்து கவர்ந்து தன் ஆன்மாவாக மாற்றுகின்றது.

பூமியில் ஒரு விதையினை ஊன்றினால் அந்த வித்தானது தனது உணர்வின் சத்தைக் காற்றிலிருந்து கவரும். அந்தப் பரப்புக்குள் நாம் செல்ல நேர்ந்தால் “அதன் வாசனையை” நாம் அறிய முடியும்.

இதைப் போன்றுதான் நம் உடலான நிலத்திற்குள் நாம் எண்ணிய உணர்வின் சத்தை நாம் பதிவு செய்து கொண்டால் உணர்வு அதிலிருந்து கவர்ந்து நமது ஆன்மாவாக மாறுகின்றது.

இருவர் சண்டையிட்டுக் கொண்டிருப்பதை வேடிக்கை பார்க்கும் பொழுது அந்த உணர்வின் அலைகள் நம்முள் கலந்து, ஊழ்வினையாகின்றது. அந்த உணர்வின் அலைகள் நமக்குள் பெருகி ஆன்மாவாகின்றது.

அவர்களுக்குள் எந்த வெறுப்பின் தன்மை கொண்டு சண்டையிடுகின்றனரோ அதைப் போன்று சண்டையிடும் உணர்வுகளை நமக்குள் நுகர்ந்து நுகர்ந்து அதையே பதிவாக்குகின்றோம்.

பிறருடைய நிலைகளை எண்ணி

1.“இப்படி ஆகிவிட்டதே…” என்று அந்தச் சோர்வின் தன்மையை நாம் எடுத்து விட்டால்

2.அந்தச் சோர்வின் உணர்வுகள் நமக்குள் வித்தாகப் பதிவாகி

3.சோர்வின் தன்மை கொண்ட உணர்வின் சத்து அதிகரித்துவிடும்.

பின் அதனின் உணர்வுகள் நம் ஆன்மாவாகும் பொழுது நம்மிடத்தில் தெளிவற்ற நிலைகளாக அமைந்து நாம் சிந்தித்தாலும் “சிந்திக்க இயலாத நிலையை” நம்மிடத்தில் உருவாக்கிவிடுகின்றது.

இந்த ஆன்மாவில் எது பெருகியிருக்கின்றதோ அதனின் உணர்வுகள்

1.நாம் ஒரு சொல் சொல்வதற்கு முன் வெளிப்பட்டு

2.“யானை வரும் பின்னே… மணியோசை வரும் முன்னே…” என்பதைப் போன்று

3.நாம் பேச இருப்பவரின் உணர்வில் மோதுகின்றது.

நாம் அவரிடம் உதவி கேட்டுச் சென்றிருப்போம். அவருடைய உதவியைக் கோரி நாம் பேசும் பொழுது நம் ஆன்மாவில் கலந்து பெருகியுள்ள சோர்வடைந்த உணர்வுகள் நம் சொல்லைக் கேட்டுக் கொண்டிருப்போரின் சுவாசத்தில் மோதி…

1.நமக்கு அவர் உதவி செய்ய விரும்பி இருந்தாலும்

2.உதவி செய்ய விரும்பும் அவரின் எண்ணத்தை இது தடுக்கும்.

ஆகவே அவர்கள் தவறு செய்யவில்லை.

ஆனால் உதவி செய்ய விரும்புவரிடத்தில் நமது கஷ்டங்களையும் வேதனைகளையும் எடுத்துச் சொல்லும் பொழுது இந்த உணர்வின் தன்மை அவரிடத்தில் விளைகின்றது. நாம் எத்தகைய கஷ்டங்களை அனுபவித்தோமோ அதனின் உணர்வுகளை அவர் நுகர்கின்றார்.

பின் அவர் தலையை ஆட்டிவிட்டு "அப்புறம் பார்ப்போம்..." என்பார். இங்கே நம்முடைய சொல்லே நமக்கு எதிரியாகின்றது. அவர்களல்ல...! அவர் உதவி செய்ய விரும்பினாலும் அவர்களுடைய உணர்வுகள் இத்தகைய நிலைகளில் விளையும்.

அதே சமயம் நமது தொழில்கள் தடைப்படும் பொழுது வேதனை என்ற நிலை வரும். வேதனை என்பதே நஞ்சு. இந்த நஞ்சின் தன்மை வந்து விட்டால் இந்த உணர்வின் தன்மை நமக்குள் அதிகமாக வளர்ந்து கை கால் குடைச்சல் சோர்வு போன்ற நிலைகள் சூழ்ந்துவிடுகின்றது.

பின் நாம் தொழில் செய்ய முடியாத நிலைகளும் நாம் அதன் வழியில் யாருடன் பேச்சின் தொடர்பு வைத்துக் கொண்டாலும்

1.அவைகளைக் கேட்டுணர்வோரின் நிலைகளையும் சோர்வடையச் செய்து

2.அவர் நம்மைப் பார்க்கும் பொழுது "இவர் எப்பொழுது பார்த்தாலும் இப்படித்தான்...!" என்று

3.நம்மைப் பற்றிய ஒரு எண்ணத்தை அவரிடத்தில் உருவாக்கும்.

4."இவர் எதையும் செய்ய மாட்டார்...!" என்ற உணர்வே அவரிடத்தில் ஓங்கி நிற்கும்.

5.இந்த இடத்தில் நம் ஆன்மாவே நமக்கு எதிரியாக வினை புரிகின்றது.

ஆகவே இதைப் போன்று நம் ஆன்மாவில் படரும் தீமையான உணர்வுகளை நீக்குவதற்குத்தான் ஒவ்வொரு நொடியும் நாம் ஆத்ம சுத்தி செய்ய வேண்டும்.

அவ்வாறு செய்து விண்ணிலிருந்து வந்து கொண்டிருக்கும், அந்தத் துருவ நட்சத்திரத்தின் பேரருள் பேரொளியை... “நம் புருவ மத்தியில் இயக்கிக் கொண்டிருக்கும் உயிர் வழி நுகர்ந்து...” நம் உடலில் உள்ள அனைத்து அணுக்களுக்கும் உணவாகக் கொடுத்து உள் முகமாக இணைக்கப் பழகிக் கொள்ள வேண்டும்.

இதன் வழி நாம் தொடர்ந்து செய்யும் பொழுது அந்தத் துருவ நட்சத்திரத்தின் ஆற்றல் மிக்க சக்தி நமது ஆன்மாவில் பாதுகாப்புக் கவசமாகப் பெரும் அருள் வட்டமாகி விடுகின்றது.

1.அது நம்முள் எத்தகைய தீமைகளையும் நம் அருகில் வராதபடி தள்ளிவிடுகின்றது.

2.நம் ஆன்மா பரிசுத்தமாகி நாம் மகிழ்ந்து வாழ முடியும்.

இந்தப் பிறவிக்குப்பின் நம் உயிராத்மா அந்த சப்தரிஷி மண்டலத்துடன் இணைந்து நாம் அனைவரும் பிறவி இல்லா நிலை என்ற அழியா ஒளிச்சரீரம் பெற முடியும்.




# நண்பர்களுக்குள் பகைமை உணர்வுகள் எப்படி இயக்கும்…?

உதாரணமாக ஒரு நண்பன் நமக்குத் தீங்கு செய்துவிட்டால் அதை எண்ணி நமக்குள் பதிவு செய்து கொள்கிறோம்.

"பாவி எனக்குத் தீங்கு செய்தானே… அவன் உருப்படுவானா…!" என்று கோபத்தின் எல்லை கடந்து உணர்ச்சி பொங்கப் பேசுகின்றோம் (சாபமிடுகின்றோம்).

அவ்வாறு நமக்குத் தீங்கு செய்தவனை எண்ணி அது உடலில் விளைந்து "அவன் தீங்கு செய்தான்…" என்று நமக்குள் பதிந்தாலோ அவனுக்குள்ளும் இந்த பதிவு உண்டு.

இந்த சாபமிட்ட இந்த உணர்வின் நிலைகள் அங்கே சென்று அவனுக்குள் புரையோடி அவனுடைய நற்குணங்களை அழித்துவிடும்.

1.ஒவ்வொரு முறையும் இவ்வாறு சாபமிடும் நிலைகளில்
2."பாவி அவன் தொல்லை கொடுக்கிறான்" என்று எண்ணினால்
3.இது அவன் செயலாக்கங்களுக்கே தடையாயிருக்கும்.

இப்பொழுது நண்பர்களுக்குள் ஒருவருக்கொருவர் வேதனைப்பட்டுப் பிரிந்திருந்தாலும் சில நேரங்களில் புரையோடும்.

புரையோடும் பொழுது சாதம் விழுங்கினாலும் விழுங்க முடியாது. எச்சில் விழுங்கும் பொழுதே புரையோடும். இவையெல்லாம் வெறுப்பின் உணர்வுகள் நமக்குள் வரும் பொழுது "நமது உறுப்பின் இயக்கங்களே தனி..."

நண்பனாக இருக்கும் பொழுது அவன் நன்மை செய்தான் என்று எண்ணப்படும் பொழுது விக்கல் வருகின்றது. அப்பொழுது உயிரின் தன்மை நமக்குள் ஊட்டி அது தணித்துக் கொள்ளும். மகிழ்ச்சியின் நிலைகள் நமக்குள் உருவாகின்றது.

இதெல்லாம் இயற்கையின் நிலையின் இயக்கங்கள். மற்றோருடன் ஒன்றி இயக்கும் நிலைகளை இங்கே உருவாக்குகின்றது.

நாம் நமது வாழ்க்கையில் மற்றோருடன் பழகிய நேரங்களில் தீமையின் உணர்வுகளை நமக்குள் பதிவு செய்யும் பொழுது நமக்குள் யாருடைய குணங்களைப் பதிவு செய்து கொண்டோமோ அது இங்கே விளையத் தொடங்கி விடுகின்றது.

இதைப் போன்று பற்றின் தன்மையால் தீமையே விளைகின்றது.

1.பாசத்தாலோ பண்பாலோ அன்பாலோ "பிறர்படும் துயரங்களைக் கேட்டறிய நேரும் பொழுது..."

2.அந்த உணர்வின் தன்மை நமக்குள் புகுந்து அந்த உணர்வின் வித்தாக விளைந்து

3.அந்த உடலிலிருந்து எது வெளிப்படுகின்றதோ அந்த அலைகளைக் கவர்ந்து நமக்குள் நோயாக உருவாக்குகின்றது.

சூரியன் தனக்குள் வருவதற்கு முன்பே நஞ்சினைப் பிளந்துவிடுவது போன்று... மனிதன் தன் உணர்வின் செயலால் தீமைகள் தன்னிடத்தில் வரும் பொழுது அதனைப் பிரித்துத் தனக்குள் ஒளியின் சுடராக மாற்றும் தன்மை பெற்றவன்.

கோளாக இருந்து நட்சத்திரமானதைப் போன்று

1.மனிதன் தன் உணர்வின் துணையால் ஒளியின் சரீரமாக மாறி அதனின் செயலாக்கங்களாக நட்சத்திரமாக இருந்து

2.தீமையைத் தன்னிடமிருந்து வெகு தூரத்திலேயே சுட்டுப் பொசுக்கும் ஆற்றல் பெற்றவன்.

இந்த ஆற்றல் மனித வாழ்க்கையில் தீமைகளை அகற்றும் உணர்வுகளைப் பெற்ற நிலையால் விளைவதுதான்.

இதைத்தான் “மாரியம்மன்” கோவிலில் நமக்குக் காண்பிக்கிறார்கள். ஒருவருடைய தீமையைக் கேட்டறிய நேரும் பொழுது, அது நமக்குள் மாறி (அவருடைய தீமை நமக்குள் மாறி -- மாரி) தீமை செய்யும் நிலையாக விளைவதைப் போன்று

1,துருவ நட்சத்திரத்தின் பேரருளை பேரொளியை நாம் பெற வேண்டும் என்று எண்ணும் பொழுது

2.அது நமக்குள் மாறித் தீமைகளை அகற்றும் சக்தியாக உருவெடுக்கின்றது.

ஆகவே நாம் துருவ நட்சத்திரத்தின் பேரருள் பேரொளி உணர்வுகளைப் பற்றுடன் பற்ற வேண்டும். அதைப் பற்றுடன் பற்றினால் நம்மை அறியாது சூழும் தீமைகளை அகற்ற முடியும். அறியாமை என்ற இருளை விலக்க முடியும்.

இந்த வாழ்வில் பெற வேண்டிய மெய்யான பொருளாக உயிருடன் ஒன்றும் உணர்வினை ஒளி பெறச் செய்ய முடியும்.

எல்லையில்லா பேரண்டத்தில்…

1.ஒரு எல்லையோடு நின்றாடும் இந்தப் பரம்பொருளில் வந்து உதித்த உயிராத்மாக்கள் நாம் அனைவரும்

2.மகரிஷிகளின் அருளாற்றலைப் பெற்று வாழ்வதே நமது எல்லையாக அமைத்திடல் வேண்டும்.

3.மெய் ஞானிகள் உரைத்த வழியை அனைவரும் பின்பற்றிப் “பெரு வீடு பெரு நிலை” அடைவதற்கு எமது ஆசிகள்.




# காலரா நோயை ஊரை விட்டே விரட்டியது

ஒரு சமயம் யாம் வசித்த ஊரில் காலரா எனும் வியாதி பரவியது. ஊரில் உள்ள பலர் காலரா வியாதியால் தாக்கப்பட்டு இறந்தனர். அது சமயம் எமக்குத் தைரியம் அதிகம் இருந்தது.

அதனால் காலரா வியாதியால் தாக்கப்பட்டு இறந்த பலரை… அதாவது சுமார் 20 அல்லது 30 பிணங்களைத் தூக்கிச் சுடுகாட்டில் போட்டு வந்தோம். ஆனால் அது சமயம் இது போன்ற பணிக்குப் பயந்து யாரும் வரவில்லை.

அது சமயம் எமது தந்தையைப் பெற்ற அம்மாவிற்கு… அதாவது எம்முடைய பாட்டிக்குக் காலரா நோய் வந்துவிட்டது. உறவினர்கள் சிலர் அவரை தூக்கிக் கொண்டு ஆஸ்பத்திரிக்குப் போய்விட்டார்கள்.

பாட்டிக்குக் காலரா நோய் வந்துவிட்டது. அவரை ஆஸ்பத்திரிக்குத் தூக்கிக் கொண்டு போய் விட்டார்கள் என்று யாம் கேள்விப்பட்டதும் எமக்கு வயிற்றுப் போக்கு ஏற்படத் தொடங்கியது.

1.காலராவில் இறந்த 30 பிணங்களை தூக்கிப் போட்டோம்… அப்பொழுது எமக்கு ஒன்றும் ஆகவில்லை.

2.எம்முடைய பாட்டிக்குக் காலரா நோய் வந்துவிட்டதே…! என்று எமது உணர்வில் சிறிது இடம் கொடுத்தவுடனே

3.எமக்கும் காலரா வந்துவிட்டது.

குருநாதர் இந்தச் சம்பவத்தைப் பின்னாட்களில் எமக்கு நினைவுபடுத்தி… "நீ தைரியத்துடனும் வலிமையுடனும் காலராவில் இறந்தவர்களைத் தூக்கிக் கொண்டு போய்ப் போட்டாய். உனக்கு ஒன்றும் ஆகவில்லை.

ஆனால் உன்னுடைய பாட்டிக்குக் காலரா நோய் வந்துவிட்டதே என்று எண்ணியவுடனே, உனக்கும் காலரா நோய் வந்துவிட்டது.

1.மனிதரிடத்தில் உணர்வு என்ன வேகமாக வேலை செய்கின்றது என்று பார்த்தாயா…? என்று கேட்டார்.

2.காலராவால் தாக்கப்பட்ட "பாட்டியின் மீதான எண்ணம் வந்தபின் தான்…" எமக்கும் காலரா நோய் வந்தது என்று

3.குருநாதர் சொன்ன பின் தான் யாம் தெரிந்து கொண்டோம்.

மதுரை சுப்பிரமணியபுரத்தில் ஒரு வாய்க்கால் இருக்கும். இப்பொழுது அந்த இடத்தில் மேம்பாலம் கட்டியிருக்கின்றார்கள். அந்த வாய்க்காலில் தண்ணீர் ஓடிக் கொண்டிருக்கும். எமக்கு வயிற்றுப் போக்கு ஏற்பட்டதுமே யாம் அந்த வாய்க்காலுக்குச் சென்று விட்டோம்.

வாய்க்காலில் கால் கழுவி விட்டு வரலாம் என்று நினைத்தால் அது நடக்காத காரியமாக இருந்தது. ஏனென்றால் வயிற்றுப் போக்கு நிற்காமல் போய்க் கொண்டிருந்தது.

பிறகு, ஒருவாறாகச் சமாளித்து ஹோட்டலுக்குச் சென்று "தயிர் சாதம் கொடுங்கள்…" என்று சொல்லி தயிர் சாதம் வாங்கிச் சாப்பிட்டோம். மனதில் "யாம் ஒரு பயில்வான்…" என்று எண்ணி தயிர் சாதத்தை ஒரு பிடி பிடித்துக் கொண்டிருந்தோம்.

ஆனால் தயிர் சாதத்தைச் சாப்பிட்டுக் கொண்டிருக்கும் பொழுதே எமக்கு வயிற்றுப் போக்கு ஏற்பட்டுவிட்டது. ஹோட்டலுக்குள்ளேயே நடந்து விட்டது, பிறகு மறுபடியும் வாய்க்காலுக்கு வந்து அமர்ந்து அலசிக் கொண்டிருந்தோம்.

ஒரு சந்தர்ப்பத்தில் எமக்குத் தைரியம் சிறிது குறைந்தது. ஆனாலும் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு “என்ன பண்ணிவிடும்...? பார்க்கலாம்...!” என்று இருந்தோம். பசித்தால் இன்னும் கொஞ்சம் தயிர் சாதம் சாப்பிடலாம் என்று எண்ணினோம்.

ஏனென்றால் தயிர் குளிர்ச்சி. தயிர் சாதம் சாப்பிட்டால் சரியாகிவிடும் என்று இருந்தோம். அதனால் தயிர் சாதம் வாங்கிச் சாப்பிட்டோம். ஆனால் சாப்பிட்ட சாதம், வயிற்றுப் போக்கால் முழுது முழுதாக வெளியே சென்றது.

எமது கண் முழியெல்லாம் உள்ளே சென்றுவிட்டது. சரி...! நாம் இந்தத் தண்ணீரிலேயே உள்ளே சென்று விடுவோம் போலிருக்கின்றது. பாட்டியையும் பார்க்க முடியாது போலிருக்கின்றது என்று எண்ணினோம். நடந்த நிகழ்ச்சி இது.

காலரா வியாதி பரவியதால் ஊரை விட்டே நிறைய பேர் ஓடிவிட்டனர். பண்டம் பாத்திரங்களை அப்படி அப்படியே போட்டுவிட்டு “தாம் தப்பித்தால் போதும்...” என்று ஓடிவிட்டனர்.

வாய்க்காலை ஒட்டி ஒரு பாலம் இருந்தது. அதில் போய் அமர்ந்து கொண்டோம். அப்பொழுது அந்தப் பாலத்தின் வழியாக வண்டி ஓட்டிக் கொண்டு ஒருவர் வந்தார்.

அவர் எம்மைப் பார்த்து, “என்னய்யா... இப்படி உட்கார்ந்திருக்கிறாய்...?" என்று கேட்டார்.

“காலராவில் இறந்தவர்களைத் தூக்கிப் போட்டு வந்தேன், இப்பொழுது எனக்கே காலரா வியாதி வந்துவிட்டது” என்று அவரிடம் கூறினோம்.

“அட... நீ என் வண்டியில் ஏறி உட்கார்...” என்று கூறி எம்மை அவருடைய வண்டியின் பின் சீட்டில் அமரச் செய்து அவருடைய கரும்புக்

காட்டிற்கு அழைத்து சென்றார். கரும்பைப் பிழிந்து ஜூஸ் எடுத்துக் கொடுத்து… “நன்றாக மூக்கு பிடிக்கச் சாப்பிடு…” என்று கூறினார்.

1.அவர் கொடுத்த கரும்புச் சாறைக் குடித்தபின் எமக்கிருந்த காலரா நோய் எங்கே போனதென்றே தெரியவில்லை.

2.யாம், பூரண குணம் அடைந்தோம்.

3.காலராவிற்கு மருந்து கரும்புச் சாறு…! இன்னும் கரும்புச் சாறு கொடுக்கச் சொல்லிக் குடித்து விட்டு அங்கிருந்து வந்தோம்.

எமது உடல் நிலை குணமானவுடனே, சும்மா இருக்கவில்லை. ஊர் முழுவதும் சுற்றி மக்களிடம் யாசகம் கேட்டுப் பெற்று காசு சேர்த்து கரும்புச் சற்றை வாங்கிக் காலராவால் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் கொடுத்தோம்.

ஏனென்றால் யாம் அப்பொழுது தேசிய இயக்கத்தில் இருந்ததால் பொது சேவையில் ஆர்வமுடன் ஈடுபட்டு… “நீ குடி… நீ குடி…” என்று எல்லோருக்கும் கரும்புச் சாறு வாங்கிக் கொடுத்தோம்.

அதன் பின் காலரா நோயும் ஊரை விட்டே ஓடிப்போயிற்று. இது ஒரு சந்தர்ப்பம்.

அப்பொழுதுதான் சொன்னார் குருநாதர்

1.“டேய்… உன்னைக் காப்பாற்றுவதற்கு அப்பொழுது நான் தான்டா வண்டியில் வந்தேன்…”

2. நீ செத்துப் போவாய்… என்று எண்ணினாய்…! ஆனால் “நீ சாகக் கூடாது என்று நான் வந்தேன்…” என்று கூறினார்.

எமக்கிருந்த காலரா நோய் நீங்கியபின் ஆசனம் செய்வது பயில்வான் தனம் செய்வது என்பதெல்லாம் எம்மால் முடியாமல் போய்விட்டது.

யாம் சாதரணமாக மதுரையில் ஆண்டாள்புரத்திலிருந்து திருப்பரங்குன்றம் வரை உடல் பயிற்சிக்காக ஓடுவோம். ஓடியபடியே திருப்பரங்குன்றத்திலிருந்து ஆண்டாள்புரம் வரை திரும்பி வருவோம். ஆண்டாள்புரத்திலிருந்து திருப்பரங்குன்றம் 6 மைல் இருக்கும். அதன் பிறகு காலை 6 மணிக்கு மில்லிற்கு வேலைக்குப் போவோம்.


இது போன்று இருந்த யாம் பாட்டிக்கு நோய் தாக்கியவுடனே எமக்கும் காலரா நோய் வந்துவிட்டது. "பாட்டியை எண்ணினாய் என்ன ஆனது உனக்கு...?" என்று கேட்டார் குருநாதர்.

1.குருநாதர் சொன்ன பின்தான் உணர்வின் இயக்கத்தை யாம் அறிந்தோம்.
2.குருநாதர் சொல்லவில்லை என்றால் எமக்கு ஒன்றும் தெரியாது.

இறந்தவர்களைத் தைரியமாகத் தூக்கிக் கொண்டு போய்ப் போட்டாய். ஆனால் உன்னுடைய பாட்டிக்குக் காலரா நோய் தாக்கிவிட்டதே என்று ஏங்கினாய்,

உடனே இதன் உணர்வு உன்னிடத்தில் என்ன வேலை செய்தது...? என்று தெரிந்து கொண்டாயல்லவா...! என்று கேட்டார் குருநாதர். இது போன்ற உணர்வுகள் ஒவ்வொன்றையும் எமக்கு அனுபவபூர்வமாகக் காட்டினார் குருநாதர்.

குருநாதர் காண்பித்த அருள் வழியில் தங்களுள் மெய் ஞானம் பெற்று, மெய் வழியில் வாழ்ந்து மெய்பொருள் காணும் திறனை தங்களுக்குள் வளர்த்து வரும் அன்பர்கள் அனைவரும் துருவ நட்சத்திரத்தின் பேரருளும் பேரொளியும் பெற்று
1.உங்களுடைய வாழ்க்கையில் உணர்வின் இயக்கங்களை அறியும் ஆற்றல் பெற்று அருள் ஞானம் பெற்று
2.சர்வ தீமைகளிலிருந்து விடுபடும் ஆற்றல் மிக்க அருள் சக்தி பெற்று
3.இந்தப் பிறவியில், பெருவீடு பெரு நிலை பெறும் நிலையாக
4.என்றும் பதினாறு என்ற அழியா ஒளிச்சரீரம் பெறும் நிலையாக
5.பேரின்பப் பெரு வாழ்வாக வாழ்ந்து வளர்ந்திட எமது அருளாசிகள்.




# "கொடுக்கல் வாங்கலில்..." கௌரவ உணர்வால் வரும் தீமைகள்

நமது கண் காது மூக்கு வாய் உடல் இதைத்தான் பஞ்ச பாண்டவர்கள் என்றார்கள். "நமது கௌரவம் குறைந்து விடுமே..." என்ற உணர்வு வரப்படும் பொழுது கௌரவர்களுக்கும் பஞ்ச பாண்டவர்களுக்கும் போராகின்றது.

பஞ்ச பாண்டவர்கள்தான் நம்மை ஆளக்கூடியவர்கள் என்றாலும், இந்த உணர்வின் தன்மை கொண்டு நம்மை ஆட்சி புரிவது கௌரவர்கள்.

ஒருவர் நம்மை தரக்குறைவாகப் பேசி அதைக் காதால் நாம் கேட்கப்படும் பொழுது நமக்குள் உணர்ச்சியைத் தூண்டுகின்றது.

அப்போது கௌரவப் பிரச்சினை வந்து

1.“இப்படி நம்மைச் சொல்லிவிட்டானே…!” என்று நமது கௌரவம் குறைந்ததாக எண்ணி வேதனைப்படுகின்றோம்

2.வேதனை என்ற நிலைகள் வரப்படும் பொழுது விஷத்தன்மைகள் நமக்குள் வருகின்றன.

நமது கண் காது மூக்கு வாய் உடல் இவை ஆட்சி புரிந்தாலும் ‘கௌரவப் பிரச்சினை…” என்று வரப்படும் பொழுது கௌரவர்களுக்கும் பஞ்ச பாண்டவர்களுக்கும் போராகிறது என்பதைக் காவியத் தொகுப்புகள் தெளிவாகக் கூறுகின்றன.

நமக்குப் பணம் தர வேண்டியவர் அதைத் தரவில்லை என்று ஒரு பக்கம் வேதனை நாம் தருகிறோம் என்று கூறியவருக்குத் தரவில்லை என்றால் “கௌரவம் போய்விடுமே…” என்று ஒரு பக்கம் வேதனை.

1.நமக்குத் தர வேண்டியவன் தருகிறேன் என்று சொல்லித் தரவில்லையே என்று கோபமும்

2.”ஏமாற்றிவிட்டானே…” என்ற வேதனையும் சேர்ந்து எலிப்பொறியில் சிக்கியது போன்று ஆகி விடுகின்றது.

3.இதனின் வேதனைகளாகும் பொழுது அது நமக்குள் நரகாசுரனாக உருப்பெறுகின்றது.

அதே சமயத்தில் மனிதன் ஒருவன் மற்றொருவனை எண்ணி “அவன் நமக்கு நன்மை செய்தான்…” என்று எண்ணினால் அவனுக்கு விக்கல் ஏற்படுகின்றது.

“அவன் நமக்குத் தீமைகள் செய்தான்” என்று எண்ணினால் அவனுக்கு புரை ஏற்படுகிறது.

அதைப் போன்று நாம் நமக்குத் தர வேண்டியவனிடம் “எனக்குப் பணம் தராமல் இருந்து விட்டாயே…!” என்று உற்று நோக்கும் பொழுது

அவனிடத்தில் இதனின் உணர்வுகள் பதிவாகி நல்ல குணங்கள் செயலற்றதாக மாறுகின்றது.

1.அவனிடத்தில் இனம் புரியாத பதட்டம் வரும்... அவருடைய வியாபாரம் குறையும்.

2.அவர் சீராக இயங்கும் தன்மையும் குறையும்.

அவரும் எண்ணுவார்... "அவருக்குக் கொடுக்க வேண்டுமே சரியான காலத்தில் அவருக்குக் கொடுக்கவில்லையே..." என்று நம்மை எண்ணி எண்ணி வேதனைப்படுவார்.

வேதனையின் உணர்வுகள் அவரிடத்தில் விளைகின்றது. கொடுக்க முடியாத நிலையில் அவருடைய வேதனை அதிகரிக்கும் பொழுது நம்மைப் பற்றிய நினைவு அவரிடத்தில் அதிகரிக்கின்றது.

இப்படி நம்மால் அவர் எடுத்துக் கொண்ட வேதனையின் உணர்வுகள் நோயாக மாறுகின்றது. அவர் நோயுடன் இருக்கும் பொழுது "நீ வேண்டுமென்றே எனக்குப் பணம் தரவில்லை...!" என்று நாம் கடுமையாகப் பேசும் பொழுது அதனின் உணர்வுகள் அவருக்குள் வளர்ந்து நரகாசுரனாக உருவாகி விடுகின்றது.

அது மட்டுமல்லாமல் நம்மைப்பற்றிய நினைவு கொண்டு வேதனையின் உணர்வுகளை வளர்த்து அது அவருள் கடுமையான நோயாக மாறி

1.அவருடைய உடலை விட்டு உயிராத்மா பிரிந்தால் அவருடைய உயிராத்மா நேராக நம்மிடத்தில் வந்துவிடும்.

2.வாங்கிய பணத்தைக் கொடுப்பதற்குப் பதிலாக அவருடைய உயிராத்மா நம்முள் வந்து விடுகின்றது.

3.அவர் தமக்குள் சேர்த்துக் கொண்ட நரக வேதனையின் உணர்வுகளை இங்கே உருவாக்கி விடுகின்றது.

இது ஒரு பக்கம்.

அதே சமயம் "இவர் கேட்டாரே அவருடைய பணத்தைக் கொடுக்க முடியவில்லையே..." என்று அவர் எடுத்துக் கொண்ட வீரிய உணர்வுகள் சாப அலைகளாக மாறுகின்றது.

இதைப் போன்ற நிலைகள்தான் மற்றவருக்குப் பணம் தர வேண்டிய நிலையில் கொடுக்க முடியாத பொழுதும் உருவாகின்றது.

அவருடைய சாப அலைகள் வளர்ச்சி அடைந்தபின் அவருடைய உயிராத்மாவும் நம்முடலில் புகுந்து பேய் மனம் என்ற நிலையில் நோயின் நிலைகளை நம்முள் உருவாக்கி விடுகின்றது.

அதன்பின் நாம் இந்த உடலை விட்டுச் சென்றால் மனிதனல்லாத பிறவியாகப் பிறக்கின்றோம். இதைத் தான் "சிவனின் கணக்குப்பிள்ளை நந்தீஸ்வரன்..." என்று சிவதத்துவத்தில் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.

வேதனையின் உணர்வை நுகர நுகர அந்நிலைகள் அவரிடத்தில் அதிகரித்து யாரை நினைத்து வளர்த்துக் கொண்டாரோ அதன் நிலைகள் கொண்டு உடலை விட்டு அகன்றால் இந்த உயிராத்மா அங்கே சென்று விஷத்தின் தன்மைகளை உருவாக்குகின்றது.

இது போன்ற சந்தர்ப்பங்களில் வேதனையின் உணர்வுகளால் நம்மிடத்தில் "விஷத்தின் தன்மையான நரகாசுரன் தான்..." வலிமை பெறுகிறான். அவனை அடக்க வேண்டும்.

காலை 4.00 மணிக்கெல்லாம் எழுந்து "ஈஸ்வரா" என்று உயிரை எண்ணித் துருவ மகரிஷிகளின் அருள் சக்தி என் உடல் முழுவதும் படர்ந்து என் உடலில் உள்ள ஜீவான்மாக்கள் ஜீவ அணுக்கள் அனைத்தும் பெற வேண்டும் ஈஸ்வரா...! என்று எண்ணி ஏங்கிக் கண்ணின் நினைவை விண்ணை நோக்கிச் செலுத்தி நம் உடலுக்குள் அதனின் உணர்வைப் படரச் செய்தல் வேண்டும்.

1.அதன் பின் யார் மீது பகைமை கொண்டோமோ அவர்பால் நினைவைச் செலுத்தி
2.துருவ மகரிஷிகளின் அருள் சக்தி அவர் பெற வேண்டும்
3.அவருடைய தொழிலில் அதிக வருமானம் வர வேண்டும்
4.என் பணத்தை எனக்குக் கொடுக்க வேண்டும் என்ற எண்ணம் பெற வேண்டும் என்று எண்ணி ஏங்கித் தியானிக்கும்போது
5.விஷத்தன்மையான உணர்வுகளிலிருந்து நம்மை நாம் பாதுகாத்துக் கொள்கின்றோம்.




# நாம் பிறரைப் பார்த்து அங்கலாய்ப்பதால் வரும் தீமைகள்

கோபப்படுவோரின் உணர்வை சுவாசித்தால் நம்மிடத்தில் அது "காளி" ஆகின்றது. அதிகமானால் இரத்தக் கொதிப்பாகின்றது.

இரத்தக் கொதிப்பு வந்துவிட்டால் மனிதரின் கை கால் அங்கங்கள் சுருங்குகின்றன… கோபத்தின் தணலும் அதிகமாகின்றது. இதைப் போன்ற உணர்வுகள் வரப்படும் பொழுது உடலுக்குள் அணுக்களாகி… வேதனையின் உணர்வுகளே அதிகமாகும்.

ஆகையால்

1.யாரைப் பார்த்தாலும் கோபிக்கும் தன்மையும்

2.தான் எதிர்பார்த்தது கிடைக்கவில்லை என்றால் உணர்ச்சி வசப்பட்டு அழுவதும்

3.அவர்களைக் கோபிப்பதுமான உணர்வுகளைத் தூண்டிவிடும்.

இவர் யார் மீது அதிகப் பற்று கொண்டு பார்க்கின்றாரோ அல்லது இவர் மீது யார் பற்று கொண்டு பார்க்கின்றனரோ அவருடைய

உணர்வுகளில் இது பதிவாகி அந்த உணர்வின் தன்மை அதிகமாகி விட்டால் இவருடைய உயிரான்மா அவருடைய உடலுக்குள் செல்கின்றது.

பின்... உடலில் இருந்த பொழுது தனக்குள் விளைய வைத்த உணர்வுகளை அவரிடத்திலும் உருவாக்குகின்றது.

இவருடைய உடலில் அதை உருவாக்கி அதே உணர்வினைத் தனது உணவாக ஈர்க்கின்றது. இவருடைய உடலில் இந்த ஆன்மா புகுந்து விட்டதால்

1.இவருக்கும் கோபம் அடிக்கடி வரும்

2.ஏன் கோபம் வருகிறது...? என்றே இவருக்குத் தெரியாது.

3.பின் இவருடைய உடலையும் வீழ்த்திவிட்டு வெளியே சென்றபின் மனிதனல்லாத பிறவியைத்தான் அடைகின்றது.

இதில் எத்தகைய உணர்வின் வலுவைச் சேர்த்துக் கொண்டதோ... பரிணாம வளர்ச்சியில் வந்த பொழுது எந்தெந்த குணங்கள் கொண்ட உடலின் உருவங்கள் பெற்றதோ... அதற்குத்தக்க உருவத்திற்கு உயிர் அழைத்துச் சென்று... எங்கே அதனின் உணர்வின் வலு இருக்கின்றதோ அங்கே அழைத்துச் செல்கின்றது.

உதாரணமாக இன்று விஞ்ஞான அறிவு கொண்டு, ஒரு TV நிலையத்தில் ஒரு அலைவரிசையில் நிகழ்ச்சிகளை ஒளிபரப்பப்படும் பொழுது மறுமுனையில் அதே அலைவரிசையில் நமது TV.யைத் திருப்பி வைக்கப்படும் பொழுது அந்த நிகழ்ச்சிகளைக் காண்கின்றோம்.

இதைப் போன்று

1.நமக்குள் எவருடைய உணர்வுகளைப் பதிவாக்கிக் கொள்கின்றோமோ அதனின் உணர்வுகள் உந்தப்படும் பொழுது

2.அதே நினைவின் உணர்வுகளை நாம் சுவாசித்து அதன் வழிகளில் பெருக்கப்படும் பொழுது

3.இந்த உடலை விட்டுச் சென்றபின் அவருடைய உடலுக்குள் நாம் புகுந்து கொள்கின்றோம்.

இயற்கையின் நியதிகளைத் தெளிவாகக் கூறுகின்றது நமது சாஸ்திரங்கள்.

ஒருவர் தொழிலில் முன்னேற்றமடைந்து அவருடைய மகிழ்ச்சியின் நிலைகளைப் பார்த்து… நாம் தமது தொழில் முன்னேற்றம் அடையவில்லை என்று சோர்வடைந்து அங்கலாய்த்துக் கொள்கிறோம்.

1.பார்…! நான் இத்தனை தொழில் செய்கின்றேன் எனக்கு ஒன்றும் கிடைக்கவில்லை.

2.ஆனால் ஆண்டவன் அவர்களுக்குக் கொடுத்துக் கொண்டே இருக்கின்றான்…! என்று

3.அவர்பால் உயர்வைக் காட்டி தன்பால் அங்கலாய்த்துக் கொள்ளப்படும் பொழுது… "அந்த எண்ணம்"

4.நமக்குள் இருக்கும் நல்ல அணுக்களுக்கு உணவு கொடுப்பதில்லை… நல்லதை வளர்க்கும் சக்தியை இழக்கின்றது.

அங்காளேஸ்வரி என்ன செய்கின்றது…? தன் குழந்தையையே பிளக்கின்றது. குடலை உருவுகின்றது. அதனுடைய வாழ்க்கையை அழிக்கின்றது.

இதைப் போன்றுதான் நாம் வேதனையை நுகர்வதனால் நமது உடலினுள் நம்மை மனிதனாக உருவாக்கிய நல்ல குணங்களை நாம் பிளந்து விடுகின்றோம்.

இதைத் தான் அவ்வாறு உருவமாகக் காட்டினார்கள் ஞானிகள். அதாவது,,,

1.அருவ நிலையில் செயல்படுவதை உருவமாகக் காண்பித்து

2.அங்கே மடி மீது குழந்தையை வைத்துக் குடலை உருவுவதாகக் காண்பித்துள்ளார்கள் ஞானிகள்.

யாரையோ பார்த்து அங்கலாய்த்து அதனின் உணர்வின் சக்தியை நமக்குள் அதிகரிக்கப்படும் பொழுது… நமக்குள் வளர்ந்து வரும் நல்ல குழந்தைகளுக்கு உணவு கொடுக்காது அதாவது… "நம்மிடத்தில் உள்ள நல்ல அணுக்களைப் பிளந்து விடுகின்றது…" என்பதனைத் தெளிவாகக் காண்பித்தார்கள் ஞானியர்கள்.

ஆனால் நாம் இப்பொழுது என்ன செய்கிறோம்…?

அங்காளேஸ்வரிக்கு ஆட்டையும் கோழியும் கொடுத்தால் அவள் நம்மைக் காப்பாற்றுவாள் என்று நமது நல்ல குணங்களைக் கொன்றிடும் நிலையாக அவளுக்கு இன்னொரு ஜீவனைப் பலி கொடுக்கின்றோம்.

பலி கொடுத்தால் அவள் நமக்குச் செய்வாள் என்று அந்த அகங்கார உணர்வுகளை எடுத்துப் பலியிட்டு அதன் உணர்வினை நுகர்ந்து விட்டால் இந்த உணர்வின் தன்மையே நமது உடலில் விளைகின்றது.

பின்… எதிலும் நம் காரியம் சித்தி ஆகவில்லை என்றால் என்ன செய்கிறோம்…?

தன் சொந்தமோ நண்பர்களோ அவர்களுடைய உயர்வின் தன்மையைக் கண்டு அங்கலாய்ப்பதும்… வெறி கொண்ட உணர்வுகளைப் பெறுவதும்… ஆக இந்த உணர்வின் தன்மையினைக் கொண்டு வரப்படும் பொழுது…

1.எவர் மேல் இந்த உணர்வின் சக்தி கொண்டாரோ அவருடைய உடலுக்குள்

2.இவர் இறந்தபின்… இவருடைய உயிரான்மா புகுந்து கொள்ளும்.

அதாவது… இந்த ஆன்மா வெளி வந்தபின் "தன் மேல் வெறுப்பு கொண்டோர் உணர்விலேயோ… அல்லது இவர் மேல் பாசம் கொண்டோர் உடல்களிலோ…" இது ஈர்க்கப்படுகின்றது.

நோய்வாய்ப்பட்டு இவர்கள் மரணமடையப்படும் பொழுது… அவர் நண்பர்கள் உற்றுப் பார்த்து இதைக் கேட்டறிந்தால் இதே உணர்வுகள் கொண்டு அந்த ஆன்மா அங்கே "அங்காளேஸ்வரி போன்று…" காட்சி தரும்.

அந்த உணர்வின் தன்மை இங்கே பயமுறுத்தும். நல்லதை எண்ண முடியாதபடி "ஐயோ என்னை விரட்டுகின்றது… ஏதோ என்னைத் துரத்துகின்றது…" என்ற நிலை வரும்.

வாழ்க்கையில் வெறுப்படைந்தோர் உணர்வுகள் அதிகரித்து விட்டால் அவர் உடலுக்குள் சென்றால் இப்படித் தான் செய்யும்.

எதனின் உணர்வை இதற்குள் வளர்த்துக் கொண்டதோ அதன் ரூபமாகக் காட்சி கொடுத்து

1."இது வருகிறது" என்றும்

2.சோர்வடையும் நேரங்கள் எல்லாம் "என்னைத் துரத்துகின்றது தூங்க விடுவதில்லை…" என்றும் சொல்வார்கள்.

அது மட்டுமல்ல…!

1.எந்தச் சிலையைப் பார்த்து அந்த உணர்வின் தன்மையைத் தனக்குள் எடுத்துக் கொண்டதோ

2.இன்னொரு உடலுக்குள் சென்றபின் “எனக்கு ஏன் ஆடு கொடுக்கவில்லை…?

3.எனக்குக் கொடுத்தது ஏன் சரியாகக் கொடுக்கவில்லை…” என்றும்

4.இந்த உணர்வு கொண்டு அந்த உடலிலே இயங்குகின்றது.

5.அசுர உணர்வின் செயல்களையே அங்கே செயல்படுத்தும்.

ஆகவே இந்த உணர்வுகள் சிறுகச் சிறுக அந்த உடலில் வளர்ந்து அந்த உடலில் இருக்கும் நல்ல அணுக்களைக் கொன்று புசித்துக் கொண்டேயிருக்கும்.

இவ்வழியில்தான் மரணங்கள் நேரிடுகின்றது. இதை எல்லாம் மாற்றியமைக்க என்ன செய்ய வேண்டும்…?

எத்தனையோ கோடிச் சரீரங்களில் பலவற்றிற்கு இரையாகி அதிலிருந்து மீண்டிடும் உணர்வை வளர்த்து மனிதனாக உருவாகி… பகைமை உணர்வுகள் இருந்தாலும் அதை அடக்கிப் பகைமையற்ற நிலையாக மாற்றி… உணர்வின் தன்மையை ஒளியாக மாற்றி அதன் செயலாக்கமாக…

1.தமது ஆறாவது அறிவைப் பயன்படுத்திய அனைவருமே இன்று சப்தரிஷி மண்டலங்களாகவும்

2.துருவ நட்சத்திரமாகவும் வாழ்ந்து வளர்ந்து கொண்டு இருக்கின்றார்கள்.

3.அந்தத் துருவ நட்சத்திரத்தின் அருள் சக்தியை ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் எடுத்து

4.நம்மிடத்தில் உள்ள பகைமை உணர்வுகளையும் வெறுப்பான உணர்வுகளையும் மாய்த்துப் பழக வேண்டும்.

துருவ நட்சத்திரத்தின் உணர்வுகளை நம்முள் வளர்த்து உடலில் உள்ள அணுக்களில் அதை விளையச் செய்து… சப்தரிஷி மண்டலங்களின் அருள் வட்டத்தில் இணைந்திடும் உணர்வாக வாழ்ந்திடல் வேண்டும்

அவ்வாறு வாழ்ந்து வரும் அனைவரும் பொருள் கண்டுணர்ந்து செயல்படும் சக்தியையும் மலரைப் போன்ற மணத்தையும் மகிழ்ந்து வாழ்ந்திடும் சக்தியையும் பெறுவதற்கு எமது அருளாசிகள்.




# மனிதனின் முடிவு எங்கே போகின்றது…? சற்று சிந்தியுங்கள்…!

உதாரணமாக நாம் கண் கொண்டு பார்க்கும் பொழுது பையன் தவறு செய்கின்றான் என்று நாம் நுகர்கின்றோம்.

நமது உடலிலுள்ள நல்ல குணங்களுக்கும்… அவன் செய்யும் தவறான குணங்களுக்கும் எதிர்மாறான நிலைகளாக இருக்கப்படும் போது…

1.உயிரிலே பட்டபின் அவனுடைய உணர்ச்சிகள் “அவன் தவறு செய்கின்றான்…” என்று உணர்த்துகின்றது.

2.உணர்த்தியவுடனே நாம் அறிகின்றோம்.

அறிந்தவுடன் அதை நிறுத்திவிட்டு அவன் ஏன் செய்கின்றான்…? என்று சிந்தனை செய்து அவனை நல்வழிப்படுத்த வேண்டும். அதை

விடுத்து நாம் வேதனைப்பட்டால் வேதனை என்பது விஷம். நாம் சிந்திக்கும் தன்மையை இழக்கின்றோம்.

சிந்திக்கும் தன்மை இழக்கப்பட்டால் கோபமென்ற உணர்ச்சியின் வேகம் கூடுகின்றது. அப்பொழுது சிந்தனையற்ற நிலைகளில் அதீதமான உணர்வுகளை நாம் சேர்க்கும் பொழுது… இந்த உணர்ச்சிகள் எல்லாம் நம் உடலில் கலக்கப்படுகின்றது.

அப்படிக் கலக்கப்படும் உணர்வுகள் நம் இரத்தங்களில் கலந்த பின் உடலில் உள்ள நல்ல அணுக்கள் அதை ஏற்க மறுத்தால் நாம் சோர்வடைந்து விடுகின்றோம்.

இப்படிப் பண்ணுகின்றானே என்ன பண்ணுவது…? என்று வேதனையில் வெறுப்பான பின் நம் உடலிலுள்ள நல்ல அணுக்கள் எல்லாம் சோர்வடைந்து… நாமும் சோர்வடைகின்றோம்.

1.செய்வதறியாது மயக்கப்படுவோரும் உண்டு.

2.சமாளிக்க முடியாத நிலையில் பதட்டமும் பயமும் நடுக்கமும் ஏற்படும்… அவனை எண்ணினாலே மயக்கம் வரும்.

3.நம் பக்கத்து வீட்டில் யாராவது இடைஞ்சல் செய்தாலும் மயக்கம் வரும்.

ரோட்டிலே அல்லது பக்கத்து வீட்டிலே ஒருத்தருக்கொருத்தர் சண்டை போடுவதைப் பார்த்தாலே நம் வீட்டிலும் சண்டை வரும். இவைகளெல்லாம் நம்மை அறியாது இயக்கக்கூடியது.

தவறு செய்யும் உணர்வுகள் பையன் உடலிலே “ரிக்…” அவன் சந்தர்ப்பத்தால் நுகர்ந்த உணர்வுகள் வெளிப்படுவது “சாம…” இசை.

நமது உடல் ரிக்… அவன் மேல் அன்பு கொண்டு பரிவு கொண்ட நாம் பேசும் பொழுது நம்முடைய நல்ல எண்ணங்கள் வெளிப்படும்போது சாம… இசை.

பாலில் பாதாமைப் போட்டால் பாலிற்கு நல்ல சத்து இருக்கிறது. அதில் ஒரு துளி விஷம் பட்டால் அதற்குச் சக்தியிருக்கிறதா…? நம்மை மயக்கத்தான் செய்கிறது. பாதாமின் வலு இழந்து விடுகின்றது.

1.பையன் தவறு செய்கின்றான் என்ற உணர்வை நுகர்ந்தோமென்றால் அதைக் குறைத்துப் பழக வேண்டும்.

2.இல்லையென்றால் அவன் செய்த தவறான உணர்வுகள் நமக்குள் வந்து எதிர் நிலையாகி

3.நமது நல்ல குணத்தை அடக்கிவிடுகின்றது...!

இதற்குப் பெயர் “அதர்வண...”

அவன் இப்படிச் செய்கின்றானே, என்ற உணர்வின் தன்மையை வளர்க்க வளர்க்க “யஜூர்...” ஓர் வித்தாகின்றது. அதனை எண்ணும் பொழுது வேதனைப்படும் உணர்வுகள் நம் உடலில் வித்தாகின்றது.

அவன் இளையவன்... நாம் மூத்தவர்கள்...! “அவன் இப்படிப் பண்ணுகிறானே...” என்ற உணர்வுகளை வளர்த்து நம் உடலில் கலந்து விட்டால் நம் உடலில் இரத்தக் கொதிப்பு வரும்.

நாம் எதாவது எண்ணினால் இப்படியாகி விட்டதே...! என்ற வேதனை இரண்டும் கலந்து வரும்.

1.சிறு மூளை பாகம் செல்லக்கூடிய இடங்களில் இரத்த அழுத்தம் அதிகமாகி விட்டால்

2.அந்த நரம்பு மண்டலம் வெடித்துவிடும்.

யாரை நினைத்து இந்த ஆன்மா வெளியில் செல்கின்றதோ அவர் உடலுக்குள் சென்றுவிடுகிறது.

நாம் குழந்தையைக் காக்க வேண்டும் என்று நினைத்தோம்.

1.அவனாலே வேதனையை அதிகமாகச் சேர்த்தோம்.

2.இறந்தபின் அவன் உடலுக்குள்ளே போய் இதே வேதனை என்ற உணர்வை உருவாக்கும்.

மான் சாந்தமானது... புலி துரத்தும் பொழுது அதே நினைவாகின்றது. துரத்தும் நேரத்தில் அந்த உணர்வுகள் அதிகமாகின்றது. அது இறந்தால் புலியின் ஈர்ப்பிற்குள் வந்து இந்த உணர்வை நுகர்ந்ததனால் புலியாக மாறுகின்றது.

பரிணாம வளர்ச்சியில் புலிக்குண்டான குணம்... அது மற்றொன்றை வேதனைப்படுத்திக் கொன்று சாப்பிடும்.

இதைப் போன்ற உணர்வை வளர்த்துக் கொண்ட தந்தை... உடலை விட்டுச் சென்றபின் மகன் உடலுக்குள் சென்று அங்கிருக்கும் நல்ல குணங்களை எல்லாம் சாப்பிட ஆரம்பித்துவிடும்.

பையனைக் காக்க வேண்டும் என்று எண்ணினாலும்

1.இந்த உணர்வுகள் அதை பலவீனப்படுத்தி அதையே வளர்க்கும்.

2.அவனுக்கும் கோபம் வரவைக்கும்.

3.இதைப் போல அதன் உணர்வுகள் தவறாகப் போக வைக்கும்.

4.தேடி வைத்த செல்வத்தை அவன் பாதுகாக்க முடியாமல் போய்விடும்.

5.கடைசியில் அவனும் இதே கதியில் மடிவான்.

அதே சமயத்தில் இவர் ஆன்மாவும் உடலை விட்டு வந்தபின் எதன் உணர்வுகள் அணுக்களாக மாறியதோ அந்த உடலை விட்டு வெளி வந்தபின் புலி மேய்ந்து கொண்டிருந்தால் அதன் உணர்வின் வலுக் கொண்டு ஈர்த்துவிடும்.

அந்த உடலுக்குள் அதே உணர்ச்சிக்குத்தக்க அதனுடைய கருவாகி மனிதன் ரூபத்தைப் புலியாக மாற்றிவிடும். நாம் தவறு செய்யவில்லை.

இதே போன்று... அவரைப் பற்றி வீட்டில் அடிக்கடி பேசினால் “பரம்பரை நோய்...” என்று வரும். இரத்தக் கொதிப்பு வந்ததென்றால் மற்றவர்களுக்கும் இதே போல் வரும்.

அவர் இரத்தக் கொதிப்பில் இறந்தார். அதே போல அந்தக் குடும்பத்தில் பரம்பரை நோயாக மாறும்.

1.அந்தக் குடும்பத்தில் எப்பொழுது பார்த்தாலும்

2.யாராவது ஒருவருக்கொருவர் சண்டை போட்டுக் கொண்டே இருப்பார்கள்.

இப்படிச் சண்டை போட்டுக் கொண்டிருப்பது குடும்பத்தில் தாய் கருவுற்றிருந்தால் கருவில் வளரும் சிசுவுக்கும் அந்த உணர்வுகள் விளையும்.

ஆக... மனிதனின் முடிவு எங்கு போகின்றது...? சற்று சிந்தியுங்கள்.

ஒரு குடும்பத்தில் இப்படி ஏற்பட்டால் அடுத்து அந்தக் குடும்ப வரிசையிலும் இதே போன்று பரம்பரை நோயாக மாறும்.

1.ஆஸ்துமா நோய் போன்ற நோய்களும் இதைப் போன்று நாம் எடுத்துக் கொண்ட நிலைகளால் வருவதுதான்.

2.வாத நோய் வருவதும் இதைப் போன்று தான்.

எத்தனையோ கோடி சரீரங்களைக் கடந்து வந்த நம் அம்மா அப்பா மனிதர்களாகப் பிறந்து நம்மை மனிதனாக உருவாக்கினாலும் சந்தர்ப்பத்தால் நாம் மனிதனல்லாத உருவுக்குத்தான் நாம் திரும்பிச் செல்கின்றோம்.

வளர்த்துக் கொண்ட உணர்வுகள் எப்படியோ... அதற்குத்தக்கத்தான் மற்ற உடல்களை உருவாக்கிக் கொண்டிருக்கும் இந்த உயிர்.

இதைப் போன்ற நிலைகளை மாற்றத்தான்

1.அடிக்கடி யாம் உங்களை ஆத்ம சுத்தி செய்யச் சொல்வது.

2.தீமை வரும் பொழுது அந்தத் துருவ நட்சத்திரத்தின் பேரருளும் பேரொளியும் பெற வேண்டும் என்று

3.அந்த அருள் சக்திகளை உயிரின் வழியாக நுகர்ந்து

4.உடலுக்குள் உள்ள எல்லா அணுக்களுக்கும் பாய்ச்சி உடனுக்குடன் சுத்தப்படுத்திக் கொள்ள வேண்டும்.

5.நாம் நுகரும் உணர்வுகள் நோயாக உருவாகாதபடி "அந்தக் கணமே..." மாற்றி அமைக்க வேண்டும்.




# “நல்லது… கெட்டது…” பற்றிய உண்மை நிலை

உதாரணமாக ஒருவர் தன் மகன் மீது பாசமாகப் பிரியமாக இருக்கிறார் என்று வைத்துக் கொள்வோம்.

அவருடைய மகன் தீய பழக்க வழக்கங்களைக் கொண்டவனாக இருந்தாலும் அவன் மீது பாசம் வைத்திருந்ததால் அவன் எந்தத் தவறு செய்திருந்தாலும் ஏற்றுக் கொள்ள மாட்டார்.

அதே சமயத்தில் அவருடைய இரண்டாவது மகன் நல்லவனாக இருப்பான். தந்தையே தவறு செய்திருந்தாலும் தவறு என்ற வகையில் மகன் தந்தையை வெறுக்கும் பொழுது தந்தையும் அவன் மீது வெறுப்பைக் காட்டுவார்.

“இவன் அயோக்கியன்…!” நம்மையே குற்றம் சாட்டுகின்றானே இவன் மோசமானவன்… அப்பனையே எதிர்க்கிறான் பார்…! என்று தந்தை

மகனையே வெறுக்கத் தொடங்கிவிடுவார். அவன் நல்லதையே செய்தாலும் “அவனைக் குற்றவாளி...” என்று தான் எண்ணுவார்.

ஆனால் முதல் மகன் தவறு செய்கின்றான். தவறு செய்தாலும் “மகனே நீ நல்லவன்டா...!” என்று அவனை ஆதரிப்பார்.

ஏனெனில் இந்த உணர்வுகள் இரண்டும் ஒன்றிக் கொள்ளும்.

மற்றவர்கள் முதல் மகன் செய்த தவறுகளைக் குற்றங்களாக அவன் தந்தையிடம் கூறினாலும் அவர் அதை ஏற்றுக் கொள்ளாமல் “இவன் இது போன்ற தவறுகளைச் செய்ய மாட்டான்... நல்லவன்...” என்று சொல்வார்.

ஆனால் இரண்டாவது மகனைப் பார்த்து “அயோக்கியன்... இவன் தவறு செய்வான்...” என்றுதான் கூறுவார்.

முதல் மகன் மீது பாசம் அதிகமாக இருப்பதால் அவன் செய்த தப்பை ஏற்றுக் கொண்டாலும் “தப்பு இல்லை” என்று தான் அவருக்குச் சொல்ல வரும்.

இது இயற்கையின் செயலாக்கங்கள்...!

1.நாம் எதை எண்ணுகின்றோமோ அதனின் உணர்வை நம்முடன் இணைக்கப்படும் பொழுது

2.அதே உணர்வின் தன்மை நமக்குள் செயல்படுகின்றது.

அதாவது... தம் பையனைக் கண் கொண்டு பார்த்து

1.அவன் தப்புச் செய்திருந்தாலும் கூட அவனை நல்லவன் என்று எண்ணும் பொழுது

2.அந்த உணர்வு கொண்டு அவருக்குள் படமாக்கி அவனை அவரிடத்தில் நல்லவனாக்குகின்றது.

இதைத்தான் கீதையிலே “நீ எதை எண்ணுகின்றாயோ அதுவாகின்றாய்...” என்று உரைக்கப்பட்டது.

தந்தை செய்த தவறுகளையெல்லாம் முதல் மகனும் செய்து வருவான். இந்த நஞ்சின் உணர்வின் தன்மை அவருக்குள் வளரப்படும் பொழுது அது அவரிடத்தில் கடும் நோயாக விளைகின்றது.

ஆனால் அந்த சமயத்தில் தந்தைக்கு உதவ வேண்டிய முதல் மகனோ...

1.தந்தையால் நல்ல பிள்ளை என்று பாராட்டு பெற்றவன் கடும் நோயில் தவிக்கும் தந்தையைப் பார்த்து

2."நீ செய்த செயல்களுக்கு நீ அனுபவிக்கின்றாய்... நான் என்ன செய்யட்டும்...?" என்று சொல்வான்.

நல்ல பிள்ளை என்று எவனைச் சொன்னாரோ அவனைப் பார்த்து "அடேய்... பாவி...!" என்று தந்தை தம் மகனைப் பார்த்துச் சொல்லும் நிலை பின் நாட்களில் வரும். இதை நாம் பார்க்கலாம்.

சில குடும்பங்களில் உணர்வின் இயக்கங்கள் இப்படி இருக்கின்றது...!

1.எந்த உணர்வுகளைக் காந்தம் (உயிரில் உள்ள காந்தமும் - உடல் அணுக்களின் காந்தமும்) கவர்ந்து தன்னிடத்தில் இணைக்கின்றதோ

2.அதனின் இயக்கமாகத்தான் அது இயக்கும்... வேறொன்றையும் இயக்காது.

இதை எல்லாம் நாம் தெளிவாகத் தெரிந்து கொள்ள வேண்டும்.




# “போதும்” என்ற மனம் இல்லாது ஆசைகளைக் கூட்டுவதால் வரும் தீமைகள்

நமது உயிரணு பல கோடி உடல்களைப் பெற்று அவ்வுடல்களில் உள்ள தீமைகளை நீக்கி நீக்கி இன்று ஆறாவது அறிவு கொண்ட மனிதராக உருவாக்கியுள்ளது.

சூதாடுவது தீமை என்று தெரிகின்றது… ஆனாலும் சூதாடப் போகின்றோம். சூதாட்டத்தில், தோற்கத் தோற்க

1.விளையாட்டில் இழந்த பணத்தைப் பிடித்துவிடலாம் என்று

2.திரும்பத் திரும்ப விளையாடி எல்லாவற்றையும் இழந்து விடுகின்றோம்.

இதற்கு உதாரணமும் ஒன்றைக் குருநாதர் எமக்கு அனுபவப்பூர்வமாகக் காண்பித்தார்.

ஒரு பால் வியாபாரி அடிக்கடி எம்மை வந்து சந்திப்பார். யாம் குருநாதருடன் சேர்ந்து சுற்றிக் கொண்டிருக்கும் காலத்தில் அந்தப் பால் வியாபாரி எம்மிடம் வந்து "குருதேவரிடம் ஏதோ சக்தி இருக்கிறது..." என்று ஊரில் பெரும்பாலானவர்கள் பேசிக் கொள்கின்றார்கள்.

ஆகையினால் சற்குருதேவர் எனக்கு ஒரு ஆசீர்வாதம் கொடுத்தால் போதும் என்று யாம் தனித்து இருந்த நேரத்தில் வந்து கூறினார்.

"என்ன ஆசீர்வாதம் வேண்டும்...?" என்று பால் வியாபாரியிடம் கேட்டோம்.

அதற்குப் பால் வியாபாரி "நான் சீட்டு விளையாடியதில் என்னிடம் இருந்த எல்லா பணமும் போய்விட்டது, வேறு வழி இல்லை... இந்தச் சைக்கிளை வைத்து விளையாடலாம்...! என்று பார்க்கின்றேன்.

இதுவும் போய்விட்டதென்றால் பால் எடுத்து விற்பதற்கு வழி இல்லை. ஆகவே குருதேவரிடம் சொல்லி "நான் சீட்டு விளையாட்டில் ஜெயிப்பதற்கு ஆசீர்வாதம் வாங்கிக் கொடுங்கள்...!" என்று கூறினார்.

மறு நாள் குருநாதரின் அருகில் யாம் இருக்கும் பொழுது பால் வியாபாரி எம்மிடம் வந்து "அண்ணே... குருநாதரிடம் அந்த விபரம் கூறினார்களா...?" என்று கேட்டார்.

"பால் வியாபாரி கேட்டதை ஏன் என்னிடம் சொல்லவில்லை...?" என்று குருநாதர் எம்மைக் கேட்டுவிட்டு "நீ (பால் வியாபாரி) ஜெயித்து வா என்று ஆசீர்வாதம் கொடு..." எம்மை பார்த்து "அவனுக்கு ஆசீர்வாதம் கொடு...!" என்று கூறினார் குருநாதர்.

யாம் அவ்வாறே பால் வியாபாரியை ஆசீர்வாதித்த பின் அவர் சீட்டு விளையாடச் சென்றார்.

சீட்டு விளையாட்டில் பால் வியாபாரி ஒரே நாளில் 25,000 ரூபாய் சம்பாதித்தார். சீட்டு விளையாட்டில் 25,000 ரூபாய் சம்பாதித்து வந்தவுடனே,

பால் வியாபாரி எமக்குப் புது வேஷ்டி புதுச் சட்டை பெட்ஷீட் வாங்கி வந்தார்.

குருநாதர் வெறும் கோவணத்துணிதான் கட்டியிருந்தார். எனவே அவருக்கு படுத்துக் கொள்ள பெட்ஷீட் இல்லையாம். அதனால் அவருக்கு ஒரு பெட்ஷீட் வாங்கி வந்திருந்தார் பால் வியாபாரி.

குருநாதர் அதை வாங்கித் தார்தாராகக் கிழித்தெறிந்தார்.

சீட்டு விளையாட்டில் ஒரே நாளில் 25,000 ரூபாய் சம்பாதித்ததும் பால் வியாபாரிக்கு "மேலும் ஆசை வந்துவிட்டது…" இன்னும் பத்து நாளைக்கு விளையாடினால் தான் பெரிய பங்களா… கார் வாங்கி விடலாம்" என்று திட்டமிட்டார்.

பால் வியாபாரி அன்று ரூபாய் 25,000 தான் சம்பாதிக்க முடிந்தது. அதையும் இங்கே கொண்டு வந்து செலவழிக்கின்றார். எங்களுக்குத் துணிமணியும் பெட்ஷீட்டும் வாங்கிக் கொடுத்துவிட்டு அவருடைய நண்பர்களுக்கெல்லாம் "நீ காபி சாப்பிடு… நீ காபி சாப்பிடு…" என்று கூறி, அதில் ரூபாய் 5,000 வரை செலவழித்தார்… 20,000 ரூபாய் மிச்சம்.

பால் வியாபாரி கொடுத்த பெட்ஷீட்டை, குருநாதர் கிழித்து எறிந்துவிட்டு

1.பால் வியாபாரியினுடைய ஆசை எதிலே போகின்றது…? ஜெயிக்க வேண்டும் என்று கேட்டான்.

2.அதைக் கொடுத்தபின் இவன் ஆசை எங்கே போகின்றது பார்

3.ஏதோ ஜெயித்துக் கொடுத்தால், இனிமேல் சீட்டு விளையாடப் போக மாட்டேன் என்று தானே கூறினான்.

4.இழந்த பணத்தைச் சம்பாதித்தான்… ஜெயித்த பணத்தை அனாவசியமாகச் செலவழிக்கின்றான்,

5.உனக்கும் எனக்கும் வேறு வாங்கிக் கொடுத்திருக்கின்றான்… நாளை எப்படி வருவான் பார்…? என்று கூறினார்.

மறு நாள் பால் வியாபாரி சீட்டு விளையாடி தன்னிடம் இருந்த சைக்கிளும் போய்விட்டது. பால் வியாபாரி எங்களிடம் வந்து "என்ன சாமி…? இப்படி ஆகிவிட்டது…!" என்று கேட்டார்.

முதலில் ஆசி கொடுத்து ஜெயித்த பின் அவரின் ஆசை சீட்டு விளையாட்டின் மீதுதான் போகின்றது.

இப்படி சமுதாயத்தில் மனிதர் சூதுகளில் ஆசையை வளர்த்துக் கொள்ளும் பொழுது "போதும்" எனும் மனம் வருவதில்லை. நம்முடைய தொழிலை முன்னேற்றி பொருளைச் சம்பாதிக்கலாம் என்ற நிலையும் இல்லை.

இப்படி சந்தர்ப்பங்கள் எப்படி வருகின்றது என்று அந்த இடத்தில் குருநாதர் காண்பித்தார்.

குருநாதர் சாதாரணமாக விடவில்லை.

1.ஒவ்வொரு நொடியிலும் மனிதரது உணர்வுகள் எப்படி இயங்குகின்றது...?

2.அதிலிருந்து நீ எப்படித் தப்புவது...? என்று அனுபவபூர்வமாக எமக்குக் காட்டினார்.




# ஒரு அசுரன் இறந்தால் பல அசுரர்கள் எழுகின்றனர் - விளக்கம்

தயவு செய்து பிறருக்கு ஏற்படும் துன்பங்களையோ வேதனைகளையோ பார்த்துச் சந்தோஷப்படாதீர்கள்.

1.பிறரின் துன்பத்தைப் பார்த்து "அவனுக்கு அப்படித்தான் வேண்டும்" என்று சந்தோஷப்படுவீர்களானால்

2.அதனின் உணர்வுகள் உங்களில் விளைந்து நோயாக உருவாகிவிடும்.

விஞ்ஞானிகள் பல ஆராய்ச்சிகளைச் செய்து மனித உணர்வின் செயல்களை அறிகின்றனர். விஞ்ஞானி ஆணைப் பெண்ணாக மாற்றுகின்றார் பெண்ணை ஆணாக மாற்றுகின்றார்.

அதே சமயத்தில் மனித உடலில் வருகின்ற நோய்களைப் போக்குவதற்குப் பாம்பு தேள் மாடு போன்றவைகளில் பல இரசாயனங்களைக் கலந்து அதில் மருந்தினைத் தயாரிக்கின்றனர்.

நமது நுரையீரல் கெட்டுப் போய்விட்டது... இருதயம் கெட்டுப் போய்விட்டது என்றால் இப்பொழுது அஞ்ச வேண்டியதில்லை. பல நவீனக் கருவிகளின் துணை கொண்டு செயற்கை உறுப்புகளை நமது உடலில் பொருத்திப் பழுதுபட்ட உடல் பாகங்கள் மேலும் சிறிது நாளைக்கு வேலை செய்யும்படியாக அமைத்து விடுகின்றார்கள்.

இத்தகைய விஞ்ஞான நிலைகள் இருந்தாலும் இந்த உடலில் எத்தனை நாள் வாழப் போகின்றோம்...? மேலும் சிறிது காலம் வாழுவதற்கே இதைச் செய்கின்றனர்.

இப்படி மாற்று உறுப்புகளை பொருத்திக் கொண்டவர்கள் மற்றவர்கள் மாதிரிச் சந்தோஷமாக இருக்க முடியாது.

ஏனென்றால் மாற்று உறுப்புகளைப் பொருத்திக் கொண்டபின் முன் போன்று நமது பணிகளைச் செய்ய முடியாது. டாக்டர்கள் சில விதிகளைக் கொடுத்து இப்படித்தான் செயல்பட வேண்டும் என்று கூறிவிடுவார்கள். இப்படித்தான் நமக்கு மருந்துகளையும் மற்ற நிலைகளையும் கொடுத்துச் சமப்படுத்துகின்றனர்.

இப்படிச் சமப்படுத்தி வாழும் நாம் மற்றொருவர் கடுமையான காய்ச்சலில் இருக்கும் பொழுது அவரை உற்றுப் பார்த்து அவருடைய வேதனையைக் கேட்டறிந்தால் உடனடியாக நமக்குள் பல நிலைகள் வரும்.

1.ஆகவே நாம் எல்லாவற்றிற்கும் அஞ்சி வாழ்ந்து

2.நம்முடைய நிலைகளில் சோர்வடைந்து நிம்மதி என்பதை இழந்திருப்போம்.

சர்க்கரைச் சத்து வியாதிக்கு இனிப்பைச் சாப்பிடக்கூடாது மற்றும் அதைச் சாப்பிடக் கூடாது இதைச் சாப்பிடக் கூடாது என்று டாக்டர்கள்

அறிவுறுத்தியதால் நாம் விரும்பியதைச் சாப்பிட முடியாமல் நமக்குள் வேதனை வளர்ந்து கொண்டே வரும்.

ஆகவே எவ்வளவு நிலையானாலும்

1.மனிதர் துரித நிலையில் மடியும் தன்மைதான் வருகின்றதே தவிர மனிதர் நீடித்த நாள் வாழும் சக்தி உள்ளதா…?

2.இந்த மனித உடலில் நாம் முழுமையாக இருக்க முடிகின்றதா…? இல்லை.

குறுகிய காலம் வாழ்வதற்காகப் பல உணர்வுகளை நாம் சேர்த்துக் கொண்டேதான் வாழுகின்றோம்.

இதே போன்று ஆஸ்த்மா உள்ளவர்கள் பழங்களைச் சாப்பிட்டால், உடனே அவர்களுக்கு ஆஸ்துமா தொல்லை அதிகமாகிவிடும். குளிர்ந்த பானத்தைச் சாப்பிட்டாலும் இதே போன்று வந்துவிடும்.

ஒரு ஊர் விட்டு மற்றொரு ஊருக்குச் சென்றால் அந்த ஊரின் தண்ணீரைச் சாப்பிட்டால் எதிர் நிலையான கிருமிகள் உண்டாகி ஆஸ்துமா தொல்லை அதிகமாகி விடுகின்றது. ஆகவே மனிதருக்குள் இத்தகைய வினைகள் வந்து கொண்டே இருக்கின்றது.

குடும்பத்தில் ஒருவருக்கு ஆஸ்துமா நோய் இருக்கிறதென்றால் அந்தக் குடும்பத்தில் மற்றவர்கள் பேசும் பேச்சின் உணர்வுகளை அவர்களது குடும்பத்தில் உள்ள கர்ப்பிணிப் பெண் உற்றுக் கேட்டு நுகர்கிறதென்றால் அந்தக் கர்ப்பிணிப் பெண்ணின் கருவில் வளரும் சிசுவினிடத்தில் ஆஸ்துமாவை உருவாக்கும் அணுக் கிருமிகள் உருவாகி விடுகின்றன.

குழந்தை தவறு செய்ததா…? இல்லை.

இதே போன்று ஒரு குடும்பத்தில் சர்க்கரைச் சத்து உள்ளவரை ஒரு கர்ப்பிணிப் பெண் அதிகமாகக் கவனித்து அவருடைய சொல்லைக் கேட்டுச் செயல்பட்டுக் கொண்டிருந்தால் அந்தக் கர்ப்பிணிப் பெண்ணின் கருவிலிருக்கும் குழந்தைக்கும் சர்க்கரைச் சத்து வந்துவிடும்.

இதனைப் பரம்பரை நோய் என்று சொல்லுகின்றார்கள்.

இன்று உலகில் எடுத்துக் கொண்டால் நூற்றுக்கு முப்பது சதவீதம் பேர் ஆஸ்துமாவில் வாடுகின்றனர். நூற்றுக்கு முப்பது சதவீதம் பேர் சர்க்கரை வியாதியால் வாடுகின்றனர். நூற்றுக்கு முப்பது சதவீதம் பேர் இரத்தக் கொதிப்பால் வாடுகின்றனர்.

இப்படி... குடும்பத்தில் ஒருவருக்கு நோய் இருந்தும் உணர்வின் வழி மற்றவருக்கும் பரவுகின்றது.

இதைத்தான் இராமாயணத்தில் ஒரு அசுரன் இறந்தால் பல அசுரர்கள் எழுகின்றனர் என்று கூறுகின்றனர். இதனை மெய்ப்பிக்கும் நிலையாக நமது குருநாதர்

1.ஒரு மனித உடலுக்குள் வேதனை என்ற நிலை உருவாகி
2.அந்த அசுர உணர்வுகளால் அந்த மனிதர் மடிந்தார் என்றால்
3.அந்த உடலில் விளைந்த உணர்வின் அலைகளை நுகர்ந்தவர்கள் எவர் எவரோ
4.அந்த உடல்களைக் கொல்கின்றது...! என்பதை எமக்கு உணர்த்தினார்.

மனித உடலில் எடுத்துக் கொண்ட வீரிய உணர்வுகளுக்கொப்ப தேள் பாம்பு கொசு போன்ற நிலைகள் மனித உடலில் இருந்து பிறக்கும் தன்மை வருகின்றது.

மனிதரை முழுமுதல் கடவுள் என்று விநாயகரை வைத்து ஞானிகளால் காண்பிக்கப்படுகின்றது. மனித உடலில் இருந்து வெளிப்படக் கூடிய உணர்வுகள் எதுவோ அதற்குத்தக்க ஒவ்வொரு உடலிலும் சேர்க்கப்படும் பொழுது இந்த நிலை ஏற்படும்.

சலிப்பும் சஞ்சலமும் ஒருவரிடம் அதிகமானால் அவர்களுடைய தலையில் பேன்கள் உருவாகும். பேன்கள் தலையில் அதிகமாக உள்ளவர்கள் பத்து நாளைக்குத் தொடர்ந்து சந்தோஷமாக இருந்து பாருங்கள். உங்கள் தலையிலுள்ள பேன்கள் தன்னால் மறைந்து போகும்.

இது போன்று சலிப்பு சஞ்சலம் வேதனை உணர்வுகளால் உருவாகும் தீமைகளில் இருந்து மீள்வது எப்படி...?

மனிதராகப் பிறந்து நஞ்சை வென்றவர் அகஸ்தியர்

1.அகஸ்தியர் துருவனாகி துருவ மகரிஷியாகி துருவ நட்சத்திரமானார்.

2.நமது பிரபஞ்சத்திலிருந்து மட்டுமல்ல… அகண்ட அண்டத்திலிருந்து எங்கிருந்து நஞ்சு வந்தாலும்

3.அதை ஒளியாக மாற்றிடும் திறன் பெற்றது துருவ நட்சத்திரம்.

4.அந்தத் துருவ நட்சத்திரத்திலிருந்து வெளிப்படும் உணர்வினை நுகர்ந்து நமது உடலில் உருவாக்கி விட்டால்

5.இந்த உடலில் தீமையை நீக்கிடும் சக்தியினை நாம் பெறுகின்றோம்.

மனித உணர்வுகளின் இயக்க உண்மைகளை அறிந்து மெய் ஞானிகள் காண்பித்த அருள் வழியில் செயல்பட்டு தம்மிடத்தில் அறியாது சேரும் தீமைகளை அகற்றி இருளான உணர்வுகளை நீக்கி… மெய்பொருள் காணும் நிலையாக வாழ்ந்து வரும் அன்பர்கள் அனைவரும் இருளினை வென்று பேரருள் பெற்று பேரொளி பெற்று… உங்கள் பேச்சால் மூச்சால் பார்வையால் மற்றவர்களின் தீமைகளை நோய்களை நீக்கும் அருளாற்றல் பெற்று… இந்த வாழ்க்கையில் பெருவீடு பெருநிலை பெறும் நிலையாக பேரின்பப் பெரு வாழ்வாக வாழ்ந்து வளர்ந்திட…. எமது அருளாசிகள்.




# நம் உடலில் நம்மை அறியாமல் புகும் ஜீவான்மாக்கள்

பிறிதொருவர் வேதனைப்படுவதை நாம் உற்றுக் கவனிக்கும் பொழுது அவ்வேதனையின் உணர்வுகள் நமக்குள் "ஜீவ அணுக்களாக" விளைகின்றது.

இதன் தொடர்வரிசையில் எதனின் உணர்வை நமக்குள் வலுவாக்கினோமோ இதே நிலை கொண்ட மற்றொருவர் இதே வேதனை கொண்டு இறந்தார் என்றால்

1.அவர் மீது நாம் பற்று கொண்டிருப்போம் என்றால்
2.அவருடைய உயிரான்மா நமது உடலுக்குள் வந்து விடுகின்றது.
3.இது தான் "ஜீவான்மா" என்பது.

தேள்களை பாம்புகளை எறும்புகளை நாம் அடித்துக் கொல்கின்றோம். இவைகளின் உயிரான்மாக்கள் எல்லாம் நம்முள் வந்து விடுகின்றன. நமது

உடலின் உணர்வை நுகர்கின்றன. மனிதனாக உருப்பெற்றுக் கருவாகின்றன.

ஜீவான்மாக்கள் மனித இரத்த நாளங்களில் குடிபுகுந்து இரத்த நாளங்களிலே சுழன்று கொண்டே வரும். ஆனால் வளர்ச்சியில்லாத உணர்வின் தன்மை நமக்குள் கருவுறும் கருவுக்குள் இணைந்துவிடும். இந்த உணர்வின் தன்மை கொண்டு அது மனிதனாகப் பிறக்கச் செய்கின்றது.

அந்த ஜீவான்மாக்கள் நமது இரத்தத்தில் கலந்து சுழன்று வரப்படும் பொழுது என்ன நடக்கிறது...?

டிரான்ஸாக்சன் (transaction) அதாவது நமது உயிரின் தன்மை உணர்வின் ஒலிகளை உடல் முழுவதும் பரவச் செய்து அதன் வழி கொண்டு நம்மை இயக்குகின்றது.

1.உயிரில் இதன் நுண் உணர்வுகள் சென்றபின்

2.உடலை விட்டுப் பிரியும் பொழுது அந்த ஆன்மா எத்தனை வேதனைப்பட்டதோ

3.அதே உணர்வினை உயிர் வழி நுகரச் செய்கின்றது,

கண் என்ன செய்கின்றதென்றால் அதே உருவத்தைக் காட்டுகின்றது. "ஐயோ... பிசாசு வருகின்றது எதிரி வருகின்றான்...!" போன்ற உணர்ச்சிகளைத் தூண்டுகின்றது.

பிறிதொரு ஆன்மா புகுந்து கொண்ட உடலில் இவையெல்லாம் தெரியும், ஆனால் நமக்குத் தெரியாது.

மைக்கில் வரும் அலைகளை டிரான்ஸிஸ்டர் (transistor) கவர்ந்து விரிவாக்கி ஒலிக்கற்றைகளை ஸ்பீக்கர் (speaker) மூலமாக எப்படி வெளிப்படுத்துகின்றதோ இதைப் போன்று அந்த ஆன்மாக்கள்

1.நம்முள் ஒளி அதிர்வுகளைக் கண் வழி பாய்ச்சுவதும் உணர்வின் ரூபங்களைக் காட்டுவதும்

2.சொல் வழியாக ஒலிக்கற்றைகளையும் வெளிப்படுத்துகின்றது.

நாம் தவறு செய்யவில்லை. பிறிதொரு ஆன்மா நம்முள் வந்து விட்டால் இவ்வாறு இயக்குகின்றது.

அதை விட்டு (உயிரின் பாகம்) நகர்ந்து விட்டால் இரத்த நாளங்களில் எந்தப் பாகத்தில் செல்கின்றதோ அந்த பாகத்தில் வலியும் குடைச்சலும் ஏற்பட்டு… "ஐயோ கை வலிக்கின்றதே… கால் குடைச்சலாக இருக்கின்றதே…" என்பது போன்ற வேதனைகளைத் தூண்டும்.

இது போன்ற பிற ஆன்மாக்களை ஈர்க்கும் சக்தி பெண்களுக்கே உள்ளது. ஏனெனில் பெண்களிடம் அன்பும் பரிவும் பாசமும் அதிகமாக இருப்பதனால் பெண்களிடம் கவரும் ஆற்றலும் அதிகமாக உள்ளது.

உதாரணமாக குடும்பத்தில் பெண்கள் மிகப் பாசமாக இருப்பார்கள். ஒருவர் இறந்து விட்டால் "ஐயோ… பாவமே…! குடும்பத்தில் இத்தனை பேரையும் விட்டு விட்டுச் சென்று விட்டாரே…!" என்று எண்ணினால் இவர்களுடைய உடலில் அந்த ஆன்மா வந்துவிடும்.

இப்படிப் பிறிதொரு ஆன்மா இவர்களுடைய உடலில் வந்து விட்டால்…

1.தான் மனித உடலில் வாழ்ந்த காலத்தில் என்னென்ன துயரத்தை அந்த ஆன்மா அனுபவித்ததோ

2.அவைகளையெல்லாம் இங்கே விளைவித்து இவர்களுடைய உடலில் கை வலி கால் வலி போன்ற நோய்களை உருவாக்குகின்றது.

இப்படிப் பெண்களிடம் பாசத்தின் தன்மை இருப்பதனால் பிற ஆன்மாக்களைக் கவர்ந்து அதன் வழி செல்லப்படும் பொழுது குடும்பத்தில் விஷத்தின் தன்மைகள் அதிகமாகப் பரவுகின்றன.

இதைப் போன்று நம்மை அறியாமலே துயர் கொள்ளும் நிலைகள் வருகின்றன. இப்படி நம்மை அறியாது வரும் துயரங்களை நீக்குவதற்கு ஜோசியமும் வாஸ்து சாஸ்திரங்களும் பார்த்தால் போய்விடுமா…?

வாஸ்து சாஸ்திரம் பார்த்து வீட்டின் நிலையையும் வாசல்படியையும் மாற்றி வைத்து விட்டால் அனைத்தும் சரியாகி விடுமா…? உங்களைக் காக்குமா…? என்பதைச் சற்றுச் சிந்தித்துப் பாருங்கள்.

1.மனிதர்களுக்கு ஜாதகமில்லை…!

2.எத்தகைய தீமைகளையும் மாற்றி அமைக்கும் தன்மை பெற்றவர்கள் தான் "மனிதர்கள்…"

இன்று வாழும் வாழ்க்கையில் விஞ்ஞான அறிவு கொண்டு, எத்தனையோ சாதனைகளைச் செய்கின்றனர்... எவ்வளவோ மாற்றங்களைச் செய்துள்ளனர்.

விமானம் பறப்பதற்கு ஜாதகமா பார்க்கின்றனர்...?

விஞ்ஞான அறிவு கொண்டு மேகங்களின் அடர்த்தி அதிகமாக இருக்குமானால் விமானத்தை விடவேண்டாம் என்று உணர்கின்றனர். இப்படி விஞ்ஞான அறிவு கொண்டு மனிதர் தம்மைக் காத்துக் கொள்கின்றனர்.

ஆனால் மெய் ஞானிகள் காண்பித்த அருள் வழியில் நாம் செயல்பட்டால் நம்முள் பகைமை உணர்வுகள் வராது காக்கலாம்.

நாம் உடல் அழுக்கைப் போக்கச் சோப்பு போட்டுத் தேய்த்துக் குளிக்கின்றோம். இதே போன்று நமது ஆன்மாவில் அறியாது சேர்ந்த அழுக்கை நீக்க வேண்டுமென்றால் துருவ நட்சத்திரத்தின் பேரருள் பேரொளியின் உணர்வை நம்முள் இணைக்க வேண்டும்.

துருவ நட்சத்திரத்தின் பேரருள் பேரொளியின் உணர்வை நம்முள் செலுத்தும் பொழுது நமது ஆன்மாவில் தீமைகள் சேராது தடுத்து... ஆன்மாவில் பட்ட அழுக்கை அது நீக்குகின்றது.

துருவ நட்சத்திரத்தின் பேரருள் பேரொளி நாங்கள் பெற வேண்டும்... அது எங்கள் உடல் முழுவதும் படர வேண்டும்... எங்கள் உடலிலுள்ள ஜீவ ஆன்மாக்கள் ஜீவ அணுக்கள் அனைத்தும் பெற வேண்டும்.

எனது வாழ்க்கையில் நான் யார் யாரையெல்லாம் பார்த்தேனோ அவர்களுடைய குடும்பமெல்லாம் துருவ நட்சத்திரத்தின் பேரருள் பேரொளியும் பெற வேண்டும். அவர்களின் குடும்பத்தில் அறியாது சேர்ந்த இருள் நீங்க வேண்டும் என்ற இந்த உணர்வின் எண்ணங்களை நமது உடலில் பதிவாக்குதல் வேண்டும்.

அதிகாலை 4.00 மணியிலிருந்து 6.00 மணிக்குள் துருவ நட்சத்திரத்திலிருந்து வெளிப்படும் அருள் உணர்வினை நாம் நுகர்தல் வேண்டும்.

இவ்வாறு துருவ நட்சத்திரத்தின் பேரருள் பேரொளியின் உணர்வுகளை நம்முள் இணைக்கும் பொழுது நம் உடலில் அறியாது சேர்ந்த தீய உணர்வின் அணுக்களுக்கு ஆகாரம் செல்லாது தடுக்கப்படுகின்றது.

இப்படித் தீமைகளை நம்முள் புகாது தடைப்படுத்தி விட்டால் அவைகளைச் சூரியனின் காந்தப் புலனறிவுகள் கவர்ந்து மேலே கொண்டு சென்றுவிடும். நமது ஆன்மா சுத்தமாகிவிடும்.

ஆகவே

1.துருவ மகரிஷிகளின் அருள் உணர்வுகளைப் பற்றுடன் பற்றுங்கள்.

2.உடலின் பற்றைப் பற்றற்றதாக்குங்கள்... அருள் ஞானத்தைப் பற்றுடன் பற்றுங்கள்.

3.பகைமையற்ற வாழ்வு வாழ்ந்திடுங்கள்.

4.இருளான உணர்வுகளை நீக்கி மெய்ப்பொருள் காணும் திறன் பெறுங்கள்... மெய் வாழ்க்கையாக வாழ்ந்திடுங்கள்.

இதன் வழி அருள் ஞானம் பெற வேண்டும் என்று ஏங்கி இருப்போர் அனைவருக்கும் "எமது குரு அருளும் எமது அருளும்... என்றும் உறுதுணையாக இருக்கும்..."




# நம்மை இயக்கும் ஆன்மாக்களால் வரும் தீமைகள்

## (1)

ஒரு முறை யாம் குருதேவருடன் சென்னையிலிருந்து மும்பைக்கு இரயிலில் சென்று கொண்டிருந்தோம். அப்பொழுது இரயிலில் ஒரு நோய்வய்ப்பட்ட பெண்மணியை அவர்களுடைய உறவினர்கள் வேலூர் ஆஸ்பத்திரியிலிருந்து மும்பைக்கு அழைத்துச் சென்று கொண்டிருந்தார்கள்.

நோய்வாய்ப்பட்ட பெண்மணி வேதனை தாளாமல் உறவினர்களிடம் "தண்ணீர் கொடு… அது கொடு… இது கொடு…!" என்று கேட்டுக் கொண்டே இருந்தார்.

ஆனால் உறவினர்களோ மருத்துவர் சொன்னபடி "உணவோ தண்ணீரோ ஒரு அளவிற்கு மேல் கொடுக்கக் கூடாது" என்பதைக் கடைப்பிடித்துக் கொண்டிருந்தார்கள்.

ஆனால் நோய்வாய்ப்பட்ட பெண்மணியோ… "அடப்பாவிகளா…! எனக்கு நாக்கு இழுத்துக் கொண்டிருக்கின்றது… உண்ணுவதற்கு எதுவும் கொடுக்கமாட்டீர்களா…?" என்று சாபமிட்டுக் கொண்டிருந்தார்.

உறவினர்கள் நோயாளியைப் பார்த்து “நீ சும்மா இருக்க மாட்டாயா…?” என்று மிரட்டுகிறார்கள்.

அங்கே இரயிலில் உடன் வந்தவர்கள்… அந்த நோயான பெண்மணியைப் பார்த்து “உனக்கு என்ன வேண்டும் அம்மா…?” என்று இரக்கமாகக் கேட்டார்கள்.

அதற்கு உறவினர்கள் “ஏனம்மா…! என்ன கொடுக்க வேண்டும் என்று எங்களுக்கு தெரியாதா…? நீ ஏன் கேட்கிறாய்…?” என்று சொன்னவுடன் நோயான பெண்மணி “பார்…! உதவி செய்பவர்களைக் கூட திட்டுகிறார்களே…” என்று எண்ணுகின்றார்.

சந்தர்ப்பம்… இது போன்ற உணர்வுகளை நுகரும் பொழுது உயிர் அதை ஜீவ அணுவாக அவர்களுக்குள் உருவாக்குகின்றது. குருநாதர் இதைக் காண்பித்தார்.

ஆனால் அங்கு யாரும் தவறு செய்யவில்லை.

1.மருத்துவர் கூறிய அறிவுரையை உறவினர்கள் கடைபிடிக்கிறார்கள்
2.எதற்காக…? நோயான பெண்மணியைக் காப்பாற்ற வேண்டும் என்று…!

ஆனால் நோயான பெண்மணியோ “இப்படி அவஸ்தைப்படுகிறேனே… கேட்டதைக் கொடுக்க மாட்டேன் என்கிறார்களே…! கொஞ்சம்கூட இரக்கம் இல்லையே…?” என்று எண்ணுகின்றார்.

இந்த உணர்வின் சொல்லைக் கேட்டவுடனே உறவினர்கள் வேகம் கொண்டு “நீ பேசாமல் இரு…!” என்கிறார்கள்.

இதனால் நோயான பெண்மணி… “நாம் இவர்களுக்கு எத்தனை செய்திருப்போம்… என்னுடைய நோயின் தன்மை தெரியாமல் இப்படிச் சீறிப் பாய்கிறார்களே… வேதனைப்படுத்துகிறார்களே…!” என்று நோயாளியின் உணர்வுகள் மாறுகின்றது.

இதெல்லாம் சந்தர்ப்பங்கள்…!

இரயிலை விட்டு இறங்கியவுடன் நோயான பெண்மணியின் வீடு வரை எம்மை சென்று வரச் சொல்லிவிட்டு குருநாதர் ஒரு இடத்தில் இருந்து விட்டார்.

யாம் அவர்களை பின் தொடர்ந்து அவர்கள் வீடு வரை சென்றோம். இரண்டு நாள் அங்கே இருந்தோம். மூன்றாம் நாள் நோயான பெண்மணியின் உயிராத்மா பிரிந்தது.

இரயிலில் வரும் பொழுது...

1.நோயான பெண்மணிக்காக யார் பரிந்து பேசினார்களோ அவர்களுடைய நினைவு

2.இந்த நோயான பெண்மணிக்கு சாகும் தருவாயில் வருகிறது... "மகராசி...! எனக்கு உதவி செய்தாளே..." என்ற எண்ணம் வந்தது.

ஆனால் உறவினர்களை நினைத்து என்னுடைய எல்லாச் சொத்துக்களையும் வைத்துக் கொண்டு "துரோகம் செய்தார்களே..." என்று சாபமிட்டது.

இத்தகைய சாப அலைகளை நுகர்ந்த உறவினர் குடும்பத்தில் சாப உணர்வுகள் விளைந்து பெருகி அவர்கள் குடும்பத் தொழில் நசுங்கியது.. குடும்பத்தில் பல குழப்பங்கள் விளைந்தது.

இதையெல்லாம் பார்க்கும்படியாக...

1.குருநாதர் எம்மை "48 நாட்கள்" அந்த வீட்டிற்கு அருகாமையில் இருந்து பார்க்கும்படி செய்தார்.

2.ஒரு பக்கத்தில் அமர்ந்து இங்கே என்ன நடக்கிறது...? என்று பார்த்துக் கொண்டிருந்தோம்.

அதே சமயத்தில் நோயான பெண்மணிக்கு யார் பரிந்து பேசினார்களே அவர்கள் நோயான பெண்மணியின் வீட்டுப் பக்கம் வந்து பார்த்தவுடனே நோயான பெண்மணியின் உயிராத்மா, இவருடைய உடலுக்குள் புகுந்து விட்டது.

புகுந்த பின்... தான் அது எப்படியெல்லாம் நோயால் அவஸ்தைப்பட்டதோ அதே வேதனையின் உணர்ச்சிகளை புகுந்து கொண்ட உடலுக்குள் ஊட்டுகின்றது.

குருநாதர் இதையும் பார்க்கச் சொன்னார்...! ஆன்மா இன்னொரு உடலுக்குள் செல்கின்றது... இவரை எப்படிச் சிரமப்படுத்துகின்றது என்று...!

தொடர்ந்து அவருடைய வீட்டில் ஒருவருக்கொருவர் குழப்பமாகி வியாபார மந்தம் தங்களை அறியாமலே குழந்தைகளிடம் சீறிப் பேசுவது, தவறான நிலையில் பேசுவது சங்கடங்கள் போன்ற பல இயக்கங்க நடப்பதை எல்லாம் அங்கே எம்மைக் கண்டுணரும்படி செய்தார்.

இயற்கையின் இயக்கத்தில்...

1.சந்தர்ப்பம், மனிதர்களை எப்படிக் குற்றவாளியாக ஆக்குகின்றது...?

2.சந்தர்ப்பத்தால் நோய் எப்படி விளைகின்றது...? என்பதையெல்லாம் குருநாதர் தெளிவாகக் காண்பித்தார்.

## (2)

கோலமாமகரிஷி... ரிஷி நிலை எப்படிப் பெற்றார்...? என்று அறிவதற்காக மங்களூர் அருகில் உள்ள கொல்லூரில் யாம் தியானமிருந்து வந்தோம்.

அதற்காக மங்களூரில் நண்பர் வீட்டில் தங்கியிருந்தோம். அப்பொழுது அங்கிருந்து இன்னொரு வீட்டிற்குப் போய் வருமாறு குருநாதர் கூறினார். அங்கு போனோம்.

அந்தக் குடும்பத்தில் ஒரு ஆண் குழந்தை பிறந்தது. பையன் பிறந்த பின் சந்தர்ப்பத்தால் பையனுடைய அப்பா இறந்து போனார். அப்பா இறந்தவுடன் பையனுடைய அம்மா வேதனை கொள்கின்றார்.

பையனுக்கு ஏற்கனவே மூத்த சகோதரி இருக்கிறார். அந்த "இரண்டு குழந்தைகளையும் விட்டு விட்டுத் தன் கணவர் இறந்து விட்டாரே... இரண்டு குழந்தைகளையும் என்ன செய்வது...?" என்று அம்மா எண்ணினார்கள்.

இப்படித் தன் கணவருடைய உணர்வையே எடுத்துக் கொண்டபின் சிறிது நாட்களில் பையனுடைய அம்மாவும் இறந்து போனார்கள்.

இந்தப் பையனுடைய அம்மாவின் அம்மா... அதாவது பையனுடைய பாட்டி தான் தொழில் செய்து குடும்பத்தைப் பராமரித்து வந்தார்கள்.

இப்படிப்பட்ட நிலையில் பாட்டி தன் பேரனைப் பார்த்து, "நாசமாகப் போகிறவன்...! இவன் பிறந்தான் இரண்டு பேரைக் கொன்று விட்டான்...!

தொலைந்து போடா நாசமாகப் போகிறவனே…!” என்று பேரனைக் கண்டாலே விரட்டினார்கள்.

பையனுடைய அக்காவோ… “அவன் என்ன செய்வான் பாட்டி…? அவர்கள் இறந்து போனால் இவன் என்ன செய்வான்…! இவனா அவர்களைக் கொன்றான்…?” என்று பையனுடைய சகோதரி தன் சகோதரனை அரவணைத்துப் பேசினாள்.

ஆனால் பாட்டி… “அவனுக்குச் சோறு போடாதே…! வெளியே தள்ளிவிடு… எங்கேயாவது பிச்சையெடுத்துச் சாப்பிடட்டும்…!” என்று சொல்கிறது.

ஆனால் பையனுடைய அக்கா “தம்பி என்ன செய்வான்…?” என்று கூடுமான வரையில் தன் தம்பியைப் பாதுகாத்து வளர்த்து வந்தாள்.

பாட்டியோ… “பையன் பிறந்தவுடன் அப்பா இறந்தார், மூன்று வருடங்களில் அம்மாவும் இறந்தார். வியாபாரமும் கெட்டது… இருக்கின்ற சொத்தும் போனது…!” என்ற உணர்வுகளை வளர்த்துக் கொண்டபின் தன் பேரனை “வெடுக்…வெடுக்…” என்று கடுமையாகத் திட்டிப் பேசினார்கள்.

1.தன் பேரன் மேல் பாட்டிக்கு வெறுப்பு அதிகமான அதே நேரத்தில் தன் பேத்தி மீது அதிகமான பாசத்தைக் காண்பித்தார்கள்.

2.இதனின் தொடர் கொண்டு பாட்டி இறந்த பின்… பாட்டியின் உயிராத்மா அந்தப் பேத்தியின் உடலுக்குள் சென்றுவிட்டது.

பேத்தியின் உடலுக்குள் பாட்டியின் உயிராத்மா சென்றபின் என்ன நடக்கிறது…?

பாட்டி பையனை எப்படித் திட்டிப் பேசினார்களோ அதே போன்று பையனின் சகோதரியும்…

1.தன்னுள் பாட்டியின் உயிராத்மா இணைந்துள்ள நிலையில்

2.தம்பியைப் பார்த்து, “தோலைந்து போடா… நாசமாகப் போடா…” என்று சொன்னாள்.

அதன்படியே தம்பியையும் விரட்டினாள்.

ஒரு உடலில் வளர்த்துக் கொண்ட உணர்வுகள் மற்றொரு உடலுக்கு மாறுவதும் இதனின் உணர்ச்சிகள் வந்ததும் செயலாக்கங்கள் எப்படி

அமைகின்றதென்றும் யாம் அறிந்து கொள்ளவே குருநாதர் எம்மை மங்களூருக்கு அனுப்பினார்.

அதற்கான இடத்தைக் காண்பித்து

1."இன்னின்ன நிகழ்ச்சிகள் நடக்கும்... அதனை நீ பார்..." என்று சொல்லியிருந்தார் குருநாதர்.

2.அவர் சொன்னது போன்றே நடந்தது.

இதன் தொடர் கொண்டு பெண் பிள்ளையின் உடலில் வேதனை உணர்வுகள் வளர்ந்து நோய் வந்து பையனின் சகோதரியும் மடிந்து விட்டது.

பையனோ... ஒதுக்கப்பட்ட நிலைகளிலிருந்து மற்றவர்களால் காக்கப்பட்டு அவன் தொழிலில் பெரியவனாக வளர்ந்து விட்டான்.

ஒதுக்கப்பட்டாலும்

1.தன் மீது பற்று கொண்டு தான் எப்படியும் வளர வேண்டும் என்று மற்றவர்களின் அன்பைப் பெற ஆரம்பித்தான்.

2.'பாவம் பையன் என்ன செய்வான்...!" என்று எண்ணிய உணர்வு கொண்டு மற்றவர்கள் அவனுக்கு உதவிகள் செய்தனர்.

அவன் சிறந்த விஞ்ஞானியாகவே ஆகிவிட்டான்.... அமெரிக்காவில் இருக்கின்றான். அவன் அனாதையாக இருந்தாலும் தன் உணர்வின் வேகத்தைக் கூட்டித் தன்னைக் காக்க வேண்டுமென்ற உணர்வை எடுத்து விஞ்ஞானி என்ற நிலை பெற்று விட்டான்...!

இது நடந்த நிகழ்ச்சி...!




# அசைவம் சாப்பிடுவதால் வரும் தீமைகள்

இப்பொழுது ஊரில் ஆட்டை அறுக்கின்றார்கள்... ஆட்டை அறுப்பவர்கள் ஆட்டினை ஈகையுடனா பார்க்கின்றார்கள்...? அதைக் கொல்ல வேண்டும்...! என்ற உணர்வுடன் பார்க்கின்றார்கள்.

கறிக் கடைக்குச் சென்று கறி வாங்கச் செல்கின்றவர்கள் கடைக்காரர் ஆட்டை அறுப்பதைப் பார்த்தால் கறி வாங்கச் சென்றவர்களுக்கு "எச்சில்..." ஊறிக் கொண்டே இருக்கும்.

ஆடு அறுக்கப்பட்டு ஆட்டின் கறி தமது கைக்கு வருவதற்கு முன்னால் ஆடு அறுக்கப்படுவதை ரசித்து வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பார்கள்.

ஆனால் இப்படி ஆடு அறுக்கப்படுவதை வேடிக்கை பார்க்கப்படும் பொழுது என்ன நடக்கின்றது...? என்பதை நேரடியாக அனுபவபூர்வமாகக் காண்பித்தார் குருநாதர்.

கறி சாப்பிடுகின்ற ஆர்வத்தில், ஆடு அறுக்கப்படுவதை வேடிக்கை பார்த்து இரசித்துக் கொண்டிருப்பார்கள்.

1.அறுக்கப்படும் ஆடோ கத்திக் கொண்டிருக்கும்.

2.ஆடு அறுக்கின்றவரைப் பார்த்து அவனை ஏங்கி... "இந்த மாதிரிக் கொல்கின்றானே..." என்ற உணர்வோடு வேதனைப்படுகின்றது.

கடைக்காரரோ... ஆட்டை வேதனைப்படுத்திக் கொன்று, தான் காசு சம்பாதிக்க வேண்டும் என்றிருக்கும் பொழுது இதனின் உணர்வுகள் அவருக்குள் கவர்ந்தபின் இந்த ஆன்மா அடுத்தவரின் உடலில் எப்படிச் செல்கின்றது...? என்பதனைக் காண்பித்தார் குருநாதர்.

அதே சமயத்தில் ஆட்டுக் கறி வாங்கப் போன இடத்தில் ஆட்டின் இரத்தத்தை வாங்குவதற்காக நின்று கொண்டிருப்பார்கள். ஆட்டை அறுப்பதை இரசித்துக் கொண்டு இரத்தம் எப்பொழுது கொடுப்பார்கள் என்று காத்திருப்பார்கள். ஆட்டை அறுத்து முடித்தவுடனே, இரத்தத்தை "தான் தான் முதலில் வாங்க வேண்டும்" என்று காத்திருப்பார்கள்.

ஆட்டை அறுக்கும் பொழுது ஆட்டினிடத்தில் உருவான வேதனையை நாம் இரசித்து பார்க்கும் பொழுது

1.நுகர்ந்த வேதனையின் உணர்வுகள் நமது உயிரில் பட்டு நம்முள் உமிழ் நீராக மாறி நமது சிறுகுடலில் கலக்கின்றது.

2.நுகர்ந்த வேதனையின் உணர்வுகள் உமிழ் நீராக மாறினாலும் அந்த உமிழ் நீருடன் இயக்க அணுக்கள் கலந்து

3.இரத்தமாக மாறும் பொழுது இயக்க அணு "ஜீவ அணுவாக" மாறுகின்றது.

4.ஆடு எத்தகைய வேதனைகளை அனுபவித்ததோ அந்த வேதனையின் உணர்ச்சியின் அணுக்கள் உடல் முழுவதும் படர்கின்றது.

5.அந்த உறுப்புகளில் எந்த வேதனை வருகின்றது...? என்பதைச் சுட்டிக் காண்பித்தார் குருநாதர்

நாம் புழுவிலிருந்து மனிதராக வரும் வரையிலும் கொடுமைகளில் இருந்து தப்ப வேண்டும் என்ற உணர்வின் வலிமைகளைச் சேர்த்துச் சேர்த்துப் பரிணாம வளர்ச்சி அடைந்து வந்தோம் என்பதைப் பார்த்தோம்.

இப்போது மனிதரானபின் இரக்கமற்ற நிலைகளில் ஆட்டைக் கொல்லும் பொழுது அப்படிக் கொன்று, ஆட்டின் உயிரான்மா வெளி வரும் பொழுது கொன்றவரின் உடலிலோ அல்லது கொல்லத் தூண்டியவரின் உடலிலோ ஆட்டின் உயிரான்மா இணைந்து விடுகின்றது.

ஏனென்றால்…

1.ஆட்டினுடைய எண்ணங்கள் இன்னார்தான் நம்மைக் கொல்லச் சொல்லித் தூண்டினர் என்றும்

2.இவர்தான் நம்மைக் கொன்றார் என்றும் அந்த உணர்வுகள் அங்கே வந்து

3.அவருடைய உடலுக்குள் ஆட்டின் உயிரான்மா புகுந்து விடுகின்றது.

ஆனால் ஆட்டைக் கொன்றவரிடத்தில் இரக்கம் ஈகை சிறிதும் இல்லை. ஆகவே அவரிடத்தில் இரக்கமற்றுக் கொல்லும் உணர்வின் வலிமை அதிகமாகின்றது. அந்த மனிதரிடத்தில் பரிவு பண்பு என்பது துளியும் இல்லை.

இத்தகைய நிலை வரும் பொழுது

1.இந்த மனித உடலின் முதுமைக் காலத்தில் மிருக உணர்வின் தன்மையே மிஞ்சும்.

2.மனித உடலின் உணர்வுகள் அனைத்தும் அழுகிவிடும்.

3.பின் மனித உடலை விட்டுப் பிரியும் உயிரான்மா மிருகப் பிறவிக்கே போகின்றது.

நுகர்ந்த உணர்வுக்கொப்ப இன்று மனிதராக இருக்கின்றார்… நாளை மனிதரல்லாத நிலைகளில் எப்படிச் சேர்கின்றார்…? என்பதனையும், இது காண்பிக்கின்றது.

1.நீ வேடிக்கை பார்க்கின்றாய்… நுகர்ந்த உணர்வு உமிழ்நீராக மாறுகின்றது.

2.உமிழ்நீர் ஆகாரத்துடன் கலந்து சிறு குடலில் கலந்தபின் அந்தச் சிறு குடலின் அணுக்கள் எப்படி இயக்கமாகின்றது.

3.பின் பெருங்குடலுக்குப் போகும் பொழுது வேதனை உணர்வுகள் ஆகாரத்தை ஜீரணிக்க மறுக்கின்றது.

4.நாம் சத்துள்ள ஆகாரங்களைச் சாப்பிட்டாலும் ஜீரணிக்க முடியாத நிலை எப்படி ஆகின்றது…?

5.ஆகாரம் இரத்தமாக மாறி கல்லீரல் மண்ணீரலுக்கு வந்து சேரும் பொழுது இரத்தத்துடன் எப்படி ஜீவ அணுக்களாக மாற்றுகின்றது.

6.முதலில் இயக்க அணுவாக இருக்கின்றது… உடலுக்குள் போனவுடன் ஜீவ அணுவாக மாறுவதும்

7.அதனுடைய மலம் உடலில் சேரும் பொழுது ஏற்கனவே நல்ல அணுக்களால் உருவாக்கப்பட்ட மலங்களில் பட்டபின்,

8.அது நல்ல அணுக்களின் தசைகளை… உறுப்புகளை எப்படிக் குறைக்கின்றது…? என்பதை அனுபவபூர்வமாகக் காண்பித்தார் குருநாதர்.

உடலில் சிறிய புண்ணாக உருவாக்கி சீழ் பிடித்ததென்றால் வட்டமாக அப்படியே கரைத்துக் கொண்டே போகும்.

அதாவது வேதனை உணர்வால் விளைந்த அணுக்கள் தசைகளைக் கரைத்து எப்படிச் சீழாக மாற்றுகின்றது என்பதனையும் நமது உடலின் உறுப்புகள் தேய்ந்து மறுபடியும், நம்முள் விஷத்தன்மைகள் எப்படி வளர்ச்சி அடைகின்றது…? என்பதனையும் குருநாதர் அங்கே அனுபவபூர்வமாக அறியச் செய்தார்.

ஏனென்றால் எத்தனயோ கோடி உடல்களைக் கடந்து மனிதராகப் பிறந்தபின் இரக்கமற்ற செயல்கள் செய்து மற்றவர்களைத் துன்புறுத்தி வாழ்கின்றார் என்ற நிலையும் பார்க்கின்றோம்.

தெய்வங்களின் பெயரைச் சொல்லி ஒன்றுமறியாத ஜீவன்களைப் பலியிட்டு எனக்குச் சுகம் வேண்டும் என்று வேண்டி பிழைகள் செய்து வாழ்ந்து கொண்டிருக்கின்ற நிலையும் பார்க்கின்றோம்.

1.இது போன்ற பிழைகளைச் செய்து தம்முள் தீமைகளையும் விஷத்தையும் வளர்க்கும் நிலையைத் தவிர்த்து

2.நம்முள் அருள் ஞானிகளின் அருள் உணர்வுகளை வளர்த்தோம் என்றால்

3.இதற்கு முன் அறியாது சேர்த்த இருளை அகற்ற முடியும்…. தீமைகள் வராது காக்க முடியும்.